தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி 1 | தி. பி. 2014 விடை 8 (22 - 5 - 1983) விலை 65 காசு — இதழ் எண்: 18 | பகுதி 24-25

★ முகுந்தன், சோதீசுவரன், நிரஞ்சன், மூவரும் மீண்டும் சிறைப்படுத்தப்பட்டனர்!

★ பிரபா, இராகவன் தப்பிச் சென்றதன் விளைவு!

★ தமிழக அரசின் தாறுமாறான நடவடிக்கை!

★ பாவலரேறு கண்டனம்!

சென்னை. மே. 20—சென்னையில் சென்ற ஆண்டு மே மாதம் தமிழீழ விடுதலைப் புலிகளான குமுந்தன் என்னும் உமாமகேசுவரன், கரிகாலன் என்னும் பிரபாகரன், சோதீசுவரன், இராகவன், நிரஞ்சன் ஆகியோர் தங்களுக்குள் போராட்டம் நிகழ்த்திச் சிறைப்பட்டதும், அவர்கள் மேல் அரசு பல்வேறு குற்றங்களுக்காக வழக்கு நடத்தி வருவதும், அதற்கிடையில் அவர்கள் அனைவரும் பிணையலில் விடுதலையாகி, சென்னையிலும் மதுரையிலும் இருந்து வந்ததும் வாசகர்கள் அறிவார்கள்.

இந்த நிலையில் கடந்த ஏப்பிரல் மாதம் 19-ஆம் நாளிலிருந்து மதுரையில் தங்கியிருந்து கொண்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனும் அவருடைய நண்பர் இராகவனும் தலைமறைவாகி விட்டனர். ஒருவேளை அவர்கள் இலங்கைக்கே தப்பிச் சென்றிருக்கலாம் என்றும் அல்லது வட இந்திய மாநிலங்களுக்கோ, போலி எல்லைக் கடவுடன் (Pass Port) இலண்டன், மேற்கு செருமனி பிரான்சு போன்ற நாடுகளுக்கோ சென்றிருக்கலாம் என்றும் பலவாறு காவல் துறையினர் கருதுகின்றனர்.

பிரபாகரனும், இராகவனும் தலைமறைவாகவோ அல்லது தப்பியோ சென்றுவிட்டாலும், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் தலைவர் உமாமகேசுவரன் என்னும் முகுந்தனும், அவருடைய கூட்டாளர்களாகிய சோதீசுவரன், நிரஞ்சன் ஆகியோரும், தங்களுக்கு வழக்கு மன்றம் வழங்கிய கட்டளைப்படி, சென்னையிலேயே தங்கியிருந்து, ஒவ்வொரு நாள் மாலையிலும் குறிப்பிட்ட காவல் நிலையத்தில் கையெழுத்திடுவதும், வழக்கு நாள்களில் வழக்கு மன்றத்திற்குச் சென்று வருவதுமாக இருந்தனர்.

ஆனால், இவர்களும் இம்மாதம 3-ஆம் பக்கல் எதிர்பாராத வகையில், தமிழகக் காவல் துறையதிகாரிகள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், வழக்கு மன்றத்தால் மீண்டும் சிறைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர். இந்த நடவடிக்கை திகைப்பூட்டுவதாகவும், வியப்பளிப்பதாகவும் இருக்கிறது. இதிலிருந்து தமிழக அரசுக்கோ அல்லது காவல்துறைக்கோ இவர்களைப் பற்றிய செய்தியில் ஒரு திட்டவட்டமான கருத்தில்லை என்று தெரிகிறது.

முதலில் மாநில அரசோ நடுவண் அரசோ, தமிழீழப் போராட்டக் கொள்கையாளர்களாகிய இவர்களை ஒரு மதிப்பான தகுதியுடன் கருதவில்லையென்று அவர்களின் பல்வேறு நடவடிக்கைகளின் வழி தெரியவருகிறது. அடிமை நிலையிலிருந்து மக்கள் உரிமைப் போராட்டத்தின் வழி, விடுதலை பெற்றுக் குடியரசு அமைப்பையுடைய இந்திய அரசு, வேறு நாடுகளின் மக்கள் உரிமைப் போராட்ட முயற்சிகளை முதலில் மதிக்கவும் தேவையானால் அவற்றுக்குத் துணை நிற்கவும் வேண்டும். அந்த வகையில் தான் இந்த அரசும் தலைமையமைச்சர் இந்திரா காந்தியும் கடந்த காலத்தில் வங்காள தேசப் போராட்டத்திற்கும் இக்கால் பாலத்தீன விடுதலை இயக்கத்திற்கும் ஆதரவும் அரவணைப்பும் உதவியும் காட்டி வந்த தன்மையை நாம் மதித்துப் பாராட்டி வந்திருக்கிறோம். ஆனால், ஏனோ தெரிவில்லை அந்த நாடுகளின் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு தந்த இந்திய அரசு, இலங்கையில் தங்கள் உயிருக்கும் உடைமைகளுக்கும் உரிமைக்கும் போராடும தமிழர்களையும் அவர்களின் போராட்ட முயற்சிகளையும் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. இனி, நடுவணரசுதான் இவர்கள்வகையில் ஒரு புறக்கணிப்போடு நடந்து கொள்ளுகிறதென்றால், நம் தமிழ் நாட்டரசும் ஒரு மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே தமிழீழ விடுதலைப் போராட்ட இயக்கங்களையும், அவ்வியக்கங்களில் தங்கள் உயிரையும் தூசாக மதித்துப் போராடி வரும் இளைஞர்களையும் கருதுவது நமக்குப் பெரும் வருத்தமாக உள்ளது.

இப்பொழுது, பிணையலில் இருந்துவரும முகுந்தன், சோதீசுவரன், நிரஞ்சன் ஆகியோரை மீண்டும் சிறைப்படுத்தியிருப்பதும், அதற்குக் காவல் துறையினர் காட்டியிருக்கும் காரணங்களும் நாம் கூறுவதை உறுதி செய்வனவாகவே உள்ளன. காவல்துறை கூறும் காரணங்கள் வருமாறு:

1. விடுதலைப் புலிகளாகிய பிரபாகரனும் இராகவனும் தப்பியோடியதைப் போன்றே, முகுந்தன் முதலியோரும் தப்பியோடி விடலாம். ஏனெனில் தப்பியோடிய பிரபாகரன், இராகவன் இவர்களுடன் முகுந்தன் குழுவினர் தாங்கள் கொண்ட வேற்றுமையை மறந்து, தொடர்பு வைத்திருப்பதாகத் தெரிய வருகிறது.

2. முகுந்தன் குழுவினர் சென்னையில் உள்ள இருவரிடம், தங்கள் துமுக்கி முதலிய கருவிகளைப் புதுப்பிக்கவும் விலைக்கு வாங்கவும் செய்தனர்.

3. சென்னையில் உள்ள அயலகப் போக்குவரத்து முகவர் ஒருவரின் வழியாகப் போலி எல்லைக் கடவுகளை (Pass Ports) வாங்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

4. இராமேசுவரத்தில் உள்ள ஒருவரிடம் கள்ளத் தோணிக்கு ஏற்பாடு செய்துள்ளனர்.

இம்முயற்சிகளால் இவர்களும் பிரபாகரன், இராகவன் ஆகியோரைப் போல் தப்பி விடுவார்கள் என்று கருதுவதால், இவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பிணையலைத் தவிர்த்து இவர்களைச் சிறைப் பாதுகாப்பில் வைத்திருக்கும்படி காவல் துறை வழக்கு மன்றத்தைக் கேட்டுக்கொண்டதன் விளைவாக இவர்கள் சிறைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

காவல்துறையின் கருத்துக்கள் அவ்வளவு தெளிவான கருத்துகளாக இல்லையென்று மேலோட்டமாகப் பார்த்தாலே நன்கு விளங்கும். முதலில் காவல்துறையினர்,

(8ஆம் பக்கம் பார்க்க)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும்
உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

பொதுமக்கள் நூல் நிலையத்திற்கான தமது வேண்டுகோளைச் செவியேற்ற அனைவருக்கும் யாழ். மாநகர முதல்வர் நன்றி நவில்கின்றார்

1981-ஆம் ஆண்டு சூன் முதல் நாளிலும், அப்பொழுது நிலவிய நெருக்கடிக் காலத்தின் கீழ் ஊரடங்க வேண்டிய இராப்பொழுதிலும் தான் விலை மதிக்க முடியாத சேர்வுகளான 97,000 பொத்தகங்கள், கிடைத்தற்கரிய பல கையெழுத்துப் படிகளுடன் தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகப் பெரிய நூல் நிலையங்களுள் ஒன்றான யாழ்ப்பாணப் பொது மக்கள் நூல் நிலையம் சாம்பலாக்கப்பட்டதும், வட பகுதியின் பெருமைக்குரியதாகத் திராவிட சிற்பவியல் பாங்கில் அமைந்த கட்டிடம் மிகப் பெரிய சேதத்துக்கு உள்ளாகியதும்.

நாகரிக உலகமோ அதனை ஒரு பண்பாட்டுப் படுகொலையாகவும், மாந்தகுலத்துக்குக் கேடான ஒரு குற்றச் செயலாகவும் வண்ணித்திருந்தது. வேறெவராலும் அல்லாது குடிமக்களின் வரிகளால் பராமரிக்கப்படும் சட்டத்தினதும், பாதுகாப்பினதும் பாதுகாவலர்களால் இந்த அறிவுள்ள செயல் நிகழ்த்தப்பட்டிருந்தமையால், தமது பண்டைய பண்பாட்டின் வைப்பகத்தைக் கொளுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி தாங்கவொண்ணா மனத்துயரத்தைத் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது

இன்றைய தொடர்பில் ஒரு பொதுமக்கள் நூல் நிலையத்தின் தொழிற்பாட்டுக்குப் பயன்படக் கூடியதாக விரிவுபடுத்தப்பட்டதும், ஓரளவு மீள வடிவமைக்கப்பட்டதுமான ஒரு கட்டிடத்துக்குத் திட்டமிடும் பொருட்டு புகழ்பெற்ற கட்டிடக் கலைஞர் வி. எசு. துரைராசா அவர்களை நூல் நிலயக்குழுவின் ஆய்வுரையின் பேரில் நகர மன்ற உறுப்பினர்கள் அழைத்திருந்தார்கள்.

முழுமை செய்யப்பட்டதும் புதிதாக மீள்விக்கப்பட்டதுமான பொது மக்கள் நூலநிலையம் — இரவல் கொடுக்கும் நூல் நிலையம், சிறுவர் நூல் நிலையம், செய்தி இதழ்கள் மற்றும் பருவ வெளியீடுகளின் அறை, உடனுதவு நூல் நிலையம், மாநாட்டு அறைகள், கண்காட்சிப் பகுதி, இடம் பெயரும் நூல்நிலைய அறை, சிறப்புச் சேர்வுகள் அறை, கேட்டல் காண்டல் ஆய்வு அறைகள், கேட்போர் கூடம், சற்றேனும் இயல்பாக இல்லாது வலிவு குறைந்தோர் தமது சில்லு வண்டிகளுடன் வந்தடைவதற்குச் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட ஏற்பாடு-ஆகியவற்றை உள்ளடக்கியதான ஒரு கல்வி நிலையத்தின் கருவாக ஒரு புதின நூல் நிலையத்தின் அனைத்துத் தொண்டுகளுக்கும் போதிய ஏற்பாடுடையதாகவிருக்கும்.

மேற்கு நோக்கிய நுழைவாயிலைக் கொண்ட இரண்டடுக்குக் கட்டிடமாகிய அதனது கட்டு வேலைகள் பெயரளவில் நரசிம்மனின் மூலத்திட்டத்தினது மூன்றும் கட்டமே தான் என்பதுடன் இன்னமும் அதற்கு அமைய அதனது திராவிட சிற்பவியல் பாங்கிலேயே அமையும். அது மறைத்திரு விபுலானந்த அடிகளாரின் எழுத்தோவியத்தை நினைவுபடுத்துவதாக, யாழின் இலச்சினை புதிய தலையாய நுழைவாயிலுக்கு மேல்வரும் நடுவண் உயர் கோபுரத்தை அணி செய்யும்.

எனவே, யாழ். பொதுமக்கள் நூல் நிலையத்தினை மீள்வித்துப் புதுப்பிக்கும் வேலைகள் இரு பகுதிகளாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன தற்போதைய கட்டிடத்தின் ஒரு விரிவாக்கமாகக் காணப்படவிருக்கும் மூலத்திட்டத்தின் மூன்றாவது கட்டிடத்துக்கு 3 017,632.- உருபா செலவுகளுக்கான ஒரு மதிப்பீட்டில் ஏற்கெனவே வேலைகள் தொடங்கப்பட்டு விரைவாக நடைபெற்று வருகின்றன.

அஃது அங்ஙனம் இருக்க, தற்போதுள்ள கட்டிடத்தின் (திருத்தப்படத்தக்க) அதன் வடபாகத்துக்கான மீள்விப்பு மற்றும் புதுப்பித்தல் வேலைகள் 2 93 296/- உருபாவுக்கான ஒரு மதிப்பீட்டுச் செலவில் நிறைவு செய்யப்பட்டுள்ளன

கடந்த மாந்த உரிமைகள் நாளில் (அதாவது 1982 திசம்பர், 10ஆம் நாளில்) இருந்து ஒரு கருநிலையில் யாழ்ப்பாண பொது மக்கள் நூல் நிலையத்தின் அடிப்படைப் பணிகளை மீளவும் தொடங்கியுள்ளோம் என்பதுடன், ஆதரவாளர்கள் நலன் விரும்பிகளால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பொத்தகங்களுடன் உடனுதவு நூல் நிலையம் அங்கு ஏற்கனவே தொழிற்படத் தொடங்கிவிட்டது. இடவசதி இல்லாத காரணத்தினால் யாழ்ப்பாண நகர மண்டபத்தின் ஒரு பகுதியில் இயங்கி வந்த செய்தி இதழிகைகள் மற்றும் பருவ வெளியீடுகள் பிரிவுகளும் இப்பொழுது இடம் பெயர்க்கப்பட்டுள்ளன. 1983, ஏப்பிரல் மா இறுதிக்குள் சிறுவர் நூல் நிலையத்தையும், இரவல் கொடுக்கும் நூல் நிலையத்தையும் திறந்துவைக்கலாமென நாம் எதிர்பார்க்கின்றோம்.

யாழ்ப்பாண பொதுமக்கள் நூல் நிலையத்தின் மீள்விப்புக்கும், புதுப்பித்தலுக்குமாக நாளதுவரை அதாவது 1983 ஏப்ரலில் 14ஆம் நாள் வரை சேர்ந்த தொகை 44,54,907/72 உருபாவாகும்.

அண்மையில் இருவேறு சூழ்நிலைகளில் அமெரிக்கத் தூதுவரகம் அண்ணளவாக நான்கு இலக்கம் உருபா பெறுமதி வாய்ந்த பொத்தகங்களை அன்பளிப்புச் செய்திருந்ததுடன், எதிர்காலத்தில் மேலும் உதவியளிக்கப்படுமென உறுதியளித்துள்ளது. யாழ்ப்பாண ஒன்றிய கிறித்தவ சங்கத்தின் மூலம் யாழ்ப்பாண பொதுமக்கள் நூல்நிலைய நம்பிக்கைப் பொருட் கொடைக்கு ஏற்கனவே ஒன்றரை இலக்க உருபாவை மொத்தமாக அன்பளிப்புச் செய்துள்ள உலகத் திருச்சபைகள் கழகம், தனது பெயரில் நூலகத்துக்கு அன்பளிப்புச் செய்யும் பொருட்டுப் பொத்தகங்களைக் கொள்வனவு செய்வதற்காக அந்த நிறுவனத்திடம் மேற்கொண்டும் பத்து இலக்கம் உருபாவுக்கான ஒரு தொகையை மீண்டும் அன்பளிப்புச் செய்துள்ளது.

இலண்டனில் உள்ள தமிழர் சிக்கல்களுக்கான நிலையக் குழுவினரிடம் இருந்து நாற்பத்திநாலு தேயிலைப் பெட்டிகள் நிறைந்த பொத்தகங்களும் மெல்போன் ஈழத் தமிழர் கழகத்திடம் இருந்து பதினொரு தேயிலைப் பெட்டிகள் நிறைந்த பொத்தகங்களும் ஏற்கெனவே எமக்குக் கிடைத்துள்ளன. அவ்வாறு செய்வதை நாம் மிகவும் விரும்புகின்ற பொழுதிலும், இந்த அறிக்கையைச் சுருக்குவதன் பொருட்டு கிடைக்கப் பெற்ற தனிப்பட்ட அன்பளிப்புகள் அனைத்தையும் விளக்கமாகக் குறிப்பிடாமைக்கு எம்மை மன்னிக்கும்படி வேண்டுகிறோம்.

நூல்நிலையத்தைத் திரும்பக் கட்டுவதற்காகவும், அதன் பணிகளை விரிவுபடுத்துவதற்காகவும் அவர்கள் அளித்துள்ள உதவிக்கும், ஒத்தாசைக்கும் நிலப்பகுதி அனைத்துமுள்ள நிறுவனங்கள் அனைத்துக்கும், தனிப்பட்டோர் ஒவ்வொருவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்ளும் அதேசமயம் யாழ்ப்பாண மாநகர முதல்வர் பதவியை யாம் துறப்பதற்கு முன்பாக யாழ்ப்பாண பொதுமக்களை நூல நிலையத்துக்கு மனம் போனவாறாக நிகழ்த்தப்பட்ட அழிவின் எதிர்வரும் இரண்டாவது ஆண்டு நிறைவை இவ்வாண்டு பொருத்தமான முறையில் தீர்மானிப்பதற்கு மறந்துபோகாதிருக்கும்படியும், எதிர்வரும் ஆண்டுகளிலும் ஒவ்வொரு சூன் முதல் நாளிலும் அங்ஙனமே தொடர்ந்து செய்துவரும்படியும் கேட்டுக் கொள்வதற்கு இவ்வாய்ப்பைப் பயன்படுத்த விரும்புகிறோம்.

இந்த உயர்ந்த நோக்கிற்கு உதவியிருக்கக் கூடிய தனிப்பட்டவர்கள் ஒவ்வொருவருக்கும் எமது நன்றியைத் தெரியப்படுத்து முகமாக அருள் கூர்ந்து எமது இந்தக் கடிதத்தைப் பரப்புதல் செய்ய வேண்டுகிறோம். நன்றி.

நகர மண்டபம், தங்கள் பணியில்,
யாழ்ப்பாணம், 18-04-1983. **இராசா விசுவநாதன்**
மாநகர முதல்வர், யாழ்ப்பாணம்.

கூலிம் திராவிடர் கழகம் வெள்ளி விழாக் கட்டுரைப் போட்டி

கடாரத்தின் தென்பகுதியில் அமைந்துள்ள (மலேசியா) கூலிம் நகரில் செயற்பட்டுவரும் மலேசிய திராவிடர் கழகம் கூலிம் கிளைக்கு இருபத்தைந்தாண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு வெள்ளிவிழாக் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. விழாவில் இடம் பெறவுள்ள பல்வேறு நிகழ்ச்சிகளில் ஒன்று அனைத்துலக மட்டத்திலான கட்டுரைப் போட்டியாகும். விளக்கம் வருமாறு:

1. அறிவியல் வளர்ச்சியும் பிற்போக்குச் சிந்தனைகளும்.
2. பெண்ணடிமை ஒழிப்பில் திராவிடர் இயக்கத்தின் பங்கு.
3. பெரியார் சிந்தனைகள் வெல்லும்.
4. தமிழினம்: தந்தை பெரியாருக்கு முன்னும் பின்னும்.

மேற்காணும் ஏதாவது ஒரு தலைப்பில் முழு அளவுத் தாளில் (Fullscape) 6 பக்கங்களுக்கு மேற்போகாமல் கட்டுரை எழுதப்பட வேண்டும் அகவைக் கட்டுப்பாடு இல்லை. கட்டுரைகள் முடிந்தனவேனும் தனித் தமிழில் படைக்கப்பட வேண்டும். அனுப்பப்படும் கட்டுரைகள் அஞ்சலில் காணாமற்போகலாம் என்பதால் பதிவு அஞ்சலில் அனுப்புக. முடிவு நாள். 1—6—83 தேர்ந்தெடுக்கப்படாத கட்டுரைகள் திரும்ப அனுப்பப்பட மாட்டா. எனினும் கலந்துகொண்ட அனைவருக்கும் அஞ்சல் வழி முடிவுகள் தெரிவிக்கப்படும்.

கட்டுரைகள் அனுப்ப வேண்டிய முகவரி:

நாரண. திருவிடச்செல்வன்
'Amutha Ilam'
38, Lorong Sekolah Convent
Kulim, Kedah.

உ. த. மு. க.
உறவு மடல்

எதிரியை இனம் காட்டுங்கள்

தோழமை நெஞ்சங்களே,

நண்பர்களை அறிதல் — எதிரிகளை இனம் காணல் இரண்டும் உ. த. மு. க. உறவை வலுப்படுத்தும். ஒன்று குறையினும் நன்று ஆகாது. நாம் தமிழினம். நமது எதிர்கள் பிற இனம் என்று 'மொட்டை' நினைப்புக் கொள்ளல் கூடாது. எதிரிகளை நம் உழைப்பாற்றலை உறிஞ்சும் யாவரிடத்தும் காணலாம்.

உழைப்பாற்றலின் விளை பொருள்களாகக் காணப்பெறும் (பருண்மை உலகம், நுண்மை உலகம்) இருவேறு உலகத்தியற்கையைத் தமிழினத்தின் வளர்ச்சிக்கு முன்னேற்றத்திற்கு உதவ விடாமல் தடுப்பவர்களின் ஆளுமையே நமக்குப் பகையாகும்!

பாட்டாளிகளின் உணர்வே தமிழின முன்னேற்றத்திற்கு உதவ வல்லது.

பேருந்தில், சீட்டு 95 காசு எனில் ஓர் உருபா தந்து விட்டு மீதி 005 காசைக் கேட்க நாணுகின்ற நடுத்தரங்கள்—அதைப் பொருட்படுத்தாத மேல் தரங்கள் உண்டு, ஆனால் 'விளத்தம் தெரியாதல்' ஏமாற்றம் அடைந்தாலும் விளத்தம் அறியப்பட்ட அப்பொழுதே அந்த மீதி 5 காசுக்காக சண்டைப் போடும் எதிர்ப்புணர்வு பாட்டாளியின் உணர்வாகும், சுரண்டப்படுதலை உணர்கின்ற உள்ளுணர்வைப் பாட்டாளிகளிடம் காணமுடியும். ஏனெனில், பாட்டாளி சுரண்டியறியாதவன். அவன் சுரண்டப்படுதலை உணர்ந்த அளவிலேயே மல்லுக்கு நிற்பது இயல்பானதே!

இப்படிப்பட்ட உணர்வே இனமானம் காக்க வல்லது. இவ்வுணர்வு வாய்க்கப் பெற்றவரே தலைமைக்கு வருதல் வேண்டும்.

'எதிரி இவர்' எனக் கண்ட பிறகு — அவரைக் காட்டிய பிறகு போர்க் குணத்தோடு எதிர்த்து நிற்கும் உணர்வு பெறுதலையே பாட்டாளியுணர்வு எனலாம்!

அறிவாளிகளின் புரட்சியுள்ளம் பாட்டாளியுணர்வைமேவிடும் ஆயினும் அதனை வழிநடத்தும் திறம் பெற உதவ வல்லது இயக்கம்! அவ்வியக்கம் உ. த. மு. க. ஆகுக!

— **பறம்பை அறிவன்.**

அன்பர்கள் கவனிக்க...

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள், கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாட்களில் மாலையில் 5 மணிக்கு மேல் வருமாறு கேட்டுக் கொள்கிறோம். வெளியூரிலிருந்து வரும் அன்பர்கள் முன்கூட்டி இசைவு பெற்று வரவும்.

அமைச்சர்.

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி 1 ... இதழ் எண்: 18 — பகுதி 2

ஆன்மீகம் என்பது என்ன? அதன் செயல்வரம்பு எது? வீரப்பன் விளக்க முடியுமா?

அண்மையில் சென்னையில் நடந்த ஓர் ஆன்மீக மாநாட்டில் அமைச்சர் வீரப்பன் கலந்து கொண்டு, ஆன்மீகம் என்னும் பெயரில் அறிவியல், பகுத்தறிவு, சீர்திருத்தம் ஆகியவை பற்றித் தம் அறியாமையும், பகுத்தறிவின்மையும், மூடத்தனமும் தெளிவாக விளங்கும்படி, ஏதேதோ உளறிக் கொட்டியிருக்கிறார். அவருக்கு இது வேண்டாத வேலை. அறநிலையத்துறை அமைச்சர் என்றால், மூடநம்பிக்கைகளுக்குத் துணைபோக வேண்டும் என்பது பொருளன்று; கொள்கையும் அன்று.

நம் நாட்டில் இன்று புழக்கத்தில் உள்ள இந்துமதம், சமண மதம், புத்தமதம், இசுலாம்மதம், கிறித்துவமதம் முதலிய மத நெறிகளில் ஆன்மீக நெறி உடைய மதம் என்பது எது என்பதை அவர் விளக்க முடியுமா? எல்லா மதங்களிலும் உள்ள 'கடவுள் கோட்பாட்டை'யே ஆன்மீக நெறி என்று வீரப்பன் கூற முன்வருவாரானால், அம் மதங்கள் தம்முள் எதற்காக முரண்பட்டுக்கொண்டு, ஒன்றையொன்று அழிக்கவும் பழிக்கவும் தாழ்த்தவும் வீழ்த்தவும் முயற்சி செய்ய வேண்டும்? இனி, மேற்கூறிய மதங்கள் தவிர, இங்குள்ள சித்தநெறி, வேதநெறி, வள்ளலார் நெறி என்பவையெல்லாம் கூட ஆன்மீகக் கருத்தையே கூறுகின்றன என்றால், அவையும் ஒன்றுக்கொன்று நேர் எதிரான கருத்துகளைக் கொண்டிருப்பது ஏன்? இருமைக் கொள்கையும் (துவைதம்), இரண்டன்மைக் கொள்கையும் (அத்துவைதம்), ஒருமை இருமைக் கொள்கையும் (துவைத்தாத்துவைதம்), சிறப்பு ஒருமைக் கொள்கையும் (விசிட்டாத்துவைதம்) ஆன்மீக முறையில் ஒரே கொள்கையைத்தான் சொல்கின்றனவா என்பதை வீரப்பன் உறுதிப்படுத்திக் கூற முடியுமா? இவ்வாறு எதையுமே இன்றுவரை தெளிவுபடுத்தி வரையறுக்க முடியாததும் குழப்பம் விளைப்பதும், சூழ்ச்சிக்காரர்களின், சுரண்டல்காரர்களின், ஏமாற்றுக்காரர்களின், மத வெறியர்களின் கோட்பாடாகவுமே உள்ள மத நெறியையே வீரப்பன் 'ஆன்மீகம்' என்று சொல்கிறாரா? இல்லை, இந்து மதம் என்று சொல்லப்படுகின்ற மூடநம்பிக்கைகளின் மொத்த உருவமாக உள்ள ஒரு மதத்தின் நெறியை மட்டுமே ஆன்மீக நெறி என்பதாக வீரப்பன சொல்கிறாரா? அவர் மிகப் பெரிதாக விளம்பரப்படுத்திப் பேசும் 'ஆன்மீக நெறி' எது அதன் செயல் வரம்புகள் எவை என்பதை அவர் தெளிவாகக் கூற வேண்டும்! இல்லை, தெரியாத ஊருக்குப் போகாத பாதை காட்டும் இம் முந்திரிக்கொட்டை அமைச்சர் வாயை மூடிக்கொண்டு பேசாமல் இருக்க வேண்டும்!

ஆன்மீகம் என்னும் பெயரில் இந்நாட்டில் நீண்ட நெடுங் காலமாக மத வல்லாண்மைக்காரர்களால் அறியாமையும், மூட நம்பிக்கையுமே பரப்பப்பட்டு வருகின்றனவே, அவற்றையெல்லாம் சரி என்று வீரப்பன் கூறுகிறாரா? இல்லை, இந்நாட்டில் பார்ப்பனிய மதம் என்று கூறப்படும் வேத, வருணாச்சிரமக் கொள்கைகளையே அடிப்படையாகக் கொண்டு, சாதி வேறுபாடுகளை இறைவனே படைத்தான், அவற்றின் அடிப்படையிலேயே வாழ்வியல் அமைப்புகள், வாழ்க்கை நலன்கள் முதலியவை பகிர்ந்தளிக்கப்பட வேண்டும், அரசும் அவற்றுக்கே இசைவாக நடக்க வேண்டும் என்று இந்து மதம் கூறுகிறதே, அதையெல்லாம் வீரப்பன் சரி என்று ஒப்புகிறாரா? அப்படியானால் இவர் அமைச்சராக இருக்கமுடியாதே! நாலாந்தரச் சூத்திரனுக்கு அமைச்சுப்பதவியும் ஆட்சிப் பொறுப்பும் இவர் கூறும் இந்து மத 'ஆன்மீக நெறிப்படி' இருக்கக் கூடாதே! அதைச் சரியென்று கூறி, ஆட்சியை விட்டு, இவர் வெளியே வந்துவிட ஒப்புகிறாரா? இவர் என்ன சொல்லுகிறார்? எதைத் தாங்க விரும்புகிறார்? ஏன் இவர்க்கு இப்படி மூளை கூழையாகிப் போனது? காஞ்சிப் பெரியவாள் கருணாநிதிக்கும் வீரமணிக்கும் வேண்டிய 'சாவிப்பு வேண்டுதல்' போல், இவருக்கும் பைத்தியம் பிடித்து உளற வேண்டும்' என்று அவரின் 'உறவுத் தாத்தா' கடவுளிடம் வேண்டிக் கொண்டாரா?

'பகுத்தறிவு, சீர்திருத்தம் என்கிற பெயரில் நடைபெறும் செயல்கள் நம்மை அறியாமை இருளில் தள்ளுவதாக உள்ளன. இதிலிருந்து மக்களை மீட்டு, மக்கள் இனத்தை ஒன்றுபடுத்த ஆன்மீக நெறி வேண்டும்' என்கிறாரே இவர், அந்தப் பகுத்தறிவும் சீர்திருத்தமும் முயன்று தாமே இவரைப் படிக்க வைத்து அமைச்சர் வேலை பார்க்கவும் உதவின. இல்லையெனில் இங்குள்ள, இவர் கூறும் ஆன்மீக நெறிப்படி இவர் மாடுகன்று மேய்த்துக் கொண்டோ ஊரூராகச் சென்று வணிகம் செய்து கொண்டோ தானே கிடக்க வேண்டும்! இதில் எதை ஆன்மீக நெறி என்கிறார் வீரப்பன்? 'மக்கள் இனத்தை ஒன்றுபடுத்த ஆன்மீக நெறி வேண்டும்' என்கிறாரே இந்த வீரப்பனாழ்வார், இங்குள்ள மதங்கள் எல்லாம் இத்தனை நூற்றாண்டுகள் வரையில் 'ஆன்மீகம்', மதம், தருமம் மோட்சம், புராணம், இதிகாசம் என்று பலவகையான ஏமாற்று முத்திரைகளால், இங்குள்ள மக்களையெல்லாம் துண்டு துணுக்காக வேறுபாடுகள் அடையச்செய்து, அவர்கள் தலைகளிலெல்லாம் மிளகாயரைத்து அவர்களை அடிமைகளாகவும், பகுத்தறிவற்றவர்களாகவும், மூடநம்பிக்கை உடையவர்களாகவும் ஆக்கி, இன்றுவரை அச் சகதிகளிலிருந்து மீளமுடியாதவர்களாகச் செய்து வைத்திருப்பதை அறியாத குருடரா இவர்?

இனி, இந்த வீரப்பன், தெரிந்தோ தெரியாமலோ, இந்த 'ஆன்மீக' நெறியாளர்களுக்கெல்லாம் ஒரு பொது இசைவு அஃதாவது உரிமம் (License) வேறு வழங்கியிருக்கிறார். 'ஆன்மீகப் பணி செய்துவரும் நிறுவனத்தின் மீது எந்த அரசுச் சட்டமும் நுழையாதாம்; அதன் செயற்பாடுகளில் குறுக்கே வராதாம்.' எப்படி? இந்தத் திறந்த வாயமைச்சரின் சிறந்த தடை நீக்கம் செய்யும்படியான பேச்சு! ஏற்கனவே கள்வர்களும், களியர்களும், திருடர்களும், முடிச்சுமாறிகளும், கள்ள உருபாத்தாள் அடிக்கும் பேர்வழிகளும், சாராயக் கடைக்காரர்களும், கடத்தல்காரர்களும் ஒன்றாகப் போயடங்கிக் கொள்ளையடிக்கும் கூடாரமாகத்தான், இவர் கூறும் ஆன்மீக நெறியை வளர்க்கும் மடங்கள், நிறுவனங்கள், கோயில்கள், ஆதீனங்கள் முதலியவை இருந்து வருகின்றன. இனி, அமைச்சரே அதுவும் 'அறநிலைய' அமைச்சரே 'உத்தரவு' போட்டுவிட்டார்! அரசுச் சட்டமோ, திட்டமோ எதுவும் அங்கு நுழையாதாம்! இனி, 'ஆன்மீக' நெறி வளர்ப்பவர்களுக்குக் கொண்டாட்டந்தான்! பகற்கொள்ளைக்குப் 'பந்தம்' பிடிக்க 'வீரப்பனார்' உள்ளவரை, 'மதம்' பிடித்த 'ஆன்மீக' அடிகளார்களுக்கு இனிமேல் குறையேது? எப்படியோ இங்கு ஏற்கனவே உள்ள கொஞ்ச நஞ்சம் மாந்தத் தன்மைக்கும் இனி அறவே இடமில்லை என்று ஆகிவிட்டது! வாழ்க வீரப்பச் சூத்திரனார்! வளர்க அவர்தம் கொற்றம்! ○

'தமிழ்நிலம்' நன்கொடை பட்டியல்!

(12-2-83 முதல் 16-5-83 முடிய)

1.	மா.சி. அண்ணாமலை	கோலாலம்பூர்	105.00
2.	கு.ப. அறவாணன்	சென்னை-30	100-00
3.	சோதிப்பிரகாசம்	பீகார்	25-00
4.	கோ. அருண்முல்லை	சிங்கப்பூர்	500-00
5.	கல்லை பெருஞ்சித்திரன்	கல்லுப்பட்டி	5-00
6.	க. அரங்கசாமி	பல்லடம்	500-00
7.	ஜெப். அருண்மொழியன்	முகவை	10-00
8.	உலகத்தமிழின முன்னேற்றக் கழகம்	அவலூர்ப்பேட்டை	10.00
9.	பகுத்தறிவாளர் கழகம்	கீழ்ப்பெண்ணாத்தூர்	5.00
10.	பகுத்தறிவு ஆசிரியர் அணி	தண்டராம்பட்டு	50.00
11.	செ. கண்ணன்	சென்னை-5	15.00
12.	மு. மாதிரையன்	திருவனந்தபுரம்	100-00
13.	மு. சொக்கப்பர்	திருப்பராய்த்துறை	5-00
14.	சி.ச. கருப்பையா	பார்த்திபனூர்	10.00

'தமிழ்நில'த்தின்மீது அக்கறைகொண்ட உள்ளங்களுக்கு நன்றி!

தமிழ் நாட்டில் உள்ள கற்றவர்கள் இதனை உணர்வார்களா?

இருள்கவிழ் தமிழகத்தில் இணையிலா விடுதலை ஒளி(லி)யைப் பாய்ச்சும் இனநலக் கொண்டலாம் பாவலரேறு ஐயா அவர்கட்கு வணக்கம். நலமே விரும்புகிறேன்.

பேராசிரியர்கள் புலவர்கள், பாவலர்கள், எழுத்தாளர்கள் நிறைய இருக்கின்றனர் இந்த ஏதிலியர் நாட்டில்! ஆயின், அவர் எண்ணம், பேச்சு, செயற்பாடு. அனைத்தும் ஆரியத்தைச் சார்ந்தே வளர்கின்றன என்பதில் ஏது ஐயம்? அவர்களில் பெரும்பாலரின் சிந்தனையும், செயலும் நுனி நாக்கு ஆங்கிலத்தில், — அயலவர் மொழிதனில் தோய்ந்து, தங்களின் எழுத்து வடிவங்களில் கலப்பைக் கலக்கிக் கயமையாக விளைகின்றன. ஆனாலோ, தமிழகத்தைச் சார்ந்திருந்து, அண்டை நாடாம் கேரளத்தில் வாழ்ந்து வரும் எழுத்தாளர் நீல. பத்மநாபனைப் போன்றோரும் இருக்கத்தான் செய்கிறார்கள் என்பதில் மகிழ்ச்சிக்குக் குறைவில்லைதான்! அவரைக் கண்டு 'குங்குமம்' கிழமை இதழ் (1-5-83) நேருரை வாங்கியிருக்கிறது. அவ்விதழாரின் வினா ஒன்று:

> "தமிழ், ஆங்கிலம், மலையாள மொழிகளில் பாக்கள், கட்டுரைகள் எழுதுகிறீர்கள். ஆங்கில, மலையாள, மொழிகளில் எழுதுவதற்கு நடைமுறையில் (Practical) தமிழ்மொழி உதவுகிறதா?"

அவர் சொல்கிறார்:

> **உதவுகிறதாவது உயிர் தருவதே தமிழ்தானே! ஒருவனால் தாய்மொழியில் தான் சிந்திக்கவும் கற்பனை செய்யவும் முடியும். சொற்களைக்கூடத் தமிழில் தேர்ந்தெடுத்துப் பின்னர்தான் மொழிமாற்றம் செய்கிறேன். தாய்மொழியான தமிழில் உருவாக்கத்தை ஏற்படுத்தாமல் ஆங்கிலம் 'மலையாள மொழிகளில் எழுதவராது என்றே சொல்லலாம்."**

நமது நாட்டிலேயே ஏந்துகள் குறைவின்றி வாழும் அந்தக் கற்றவர்கள்(!) இதனை உணர்வார்களா?

— தாரை. சிதம்பரபாரதி.

உ.த.மு.க செய்திகள்

வடஆர்க்காடு மாவட்டம் அவலூர்ப் பேட்டையில் உ.த.மு.க. சிறப்புக் கூட்டம்

கடந்த மேழம் 11-(24-4-83) ஞாயிறு மாலை 7 மணி அளவில் வட ஆர்க்காடு மாவட்டம். அவலூர்ப் பேட்டையில் உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் கொள்கை விளக்கச் சிறப்புக் கூட்டம், அவ்வூர் தலைமை மருத்துவர் திரு. கோ. சரவணன். மரு. மு., அறு. இ. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தொடக்கத்தில் ஆசிரியர் திரு. மா. அருணகிரிநாதன் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினார். அடுத்து அவலூர்ப் பேட்டை உ. த. மு. க. செயலர் திரு. கூ. சா. இராமலிங்கனார் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. இரா. கேசவன் (பொருளர் உ. த. மு. க.) அவர்கள் தொடக்கவுரை ஆற்றி நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்தார்கள். திருமிகு. இராம. குப்புஐயா அவர்கள் (தலைவர் திருக்குறள் பேரவை) முன்னிலை யேற்று உரையாற்றினார்.

அவர்களைத் தொடர்ந்து தா. நெஞ்சிற்கினியன் (வட்டத் தலைவர் உ. த. மு. க.), தே. இரா. கோவிந்தராசன் க. மு. (தலைமை ஆசிரியர், இட்டமொழி), இராம. பாண்டுரங்கனார், (தலைமை அஞ்சலகத் துணைத் தலைவர், ஆரணி), உலகமுதல்வன் (வ.ஆ தற்கு மாவட்ட உ. த. மு. க. செயலர், திருவண்ணாமலை, விழுப்பரையன் (தெ.ஆ. மாவட்டச் செயலர் விழுப்புரம்) ஆகியோர் உரை ஆற்றியதற்குப் பின், கழக முதல்வர் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் ஏறத்தாழ 2 மணிநேரம் கழகக் கொள்கைகளை விளக்கிச்சிறப்புப் பேருரை நிகழ்த்தினார்கள். இறுதியில் கி. கோவிந்தராசன் நன்றியுரை கூறினார். இரவு 12மணியளவில் நிகழ்ச்சி சிறப்புற முடிவுற்றது. இந்நிகழ்ச்சி அவ்வட்டாரத்தில் பெரும் விழிப்புணர்வையும் தமிழர் இனவுணர்வையும் கிளர்ந்தெழச் செய்தது என்பதை அவ்வூர்ப் பொது மக்கள் பலரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

வினா? விடை!..?!

ஆசிரியரின் வினா விடைப் பகுதிக்கு அன்பர்களிடமிருந்து கேள்விகள் எதிர் பார்க்கப்படுகின்றன.

நடைமுறை அரசியல், குமுகவியல், மொழி, இனவியல் தொடர்பான சிக்கல்களுக்கான ஆசிரியரின் தெளிவான கருத்தைப் பெறலாம்.

'வினா? விடை!'ப் பகுதி,
தமிழ்நிலம், சென்னை-5.

நூல் மதிப்புரை :

தமிழன் கண்ட இசை!

ஆசிரியர். ப. தண்டபாணி பொறி.இ; அறி.மு. (பொறி.)

பொறியியல் அறிஞர் ப **தண்டபாணி** அவர்கள் தமக்குள்ள தமிழார்வம் காரணமாகவும், தமிழிசையின் மேல் இயற்கையாகவே அவருக்கிருந்த இடையறுப் பற்றின் அடிப்படையிலும், தம் இசைத்துறை அறிவை மிகுத்துக் கொண்டவராவர். இசைத்துறை அறிவு அவரை இசையாராய்ச்சியில் ஈடுபடச் செய்தது. அதன் விளைவாக அவருக்கு ஒரு கொள்கை பிறந்தது. அது, 'பண்டைத் தமிழிசையை எவ்வாறேனும் ஆரியத்தின்-அக்கிரகாரத்தின்—பிடியிலிருந்து மீட்டு, விடுவித்துத் தமிழ் மக்களின் நல்வாழ்வுக்கு அக்கலையைப் பயன்படுமாறு செய்ய வேண்டும்' என்பது. அம்முயற்சியின் முதற்படியாக இச்சிறு விளக்க நூலை எழுதியிருப்பதாக, இந்நூலின் முன்னுரையில் அவர் குறிப்பிடுகிறார்.

இது நாற்பது பக்கங்களைக் கொண்ட மிகச் சிறிய நூல். ஆனால் தமிழரின் இசைக்கலை மாட்சிக்கும், வரலாற்று நிலைக்கும் ஒரு சிறந்த விளக்க நூலாக அமைந்துள்ளது பெரிதும் மகிழ்ச்சி தருகிறது. இதில் தமிழரின் பண்டைய இசையறிவும் வரலாற்று உண்மைகளும் சிறு அளவில், ஆனால் உறுதியான முறையில் தக்க சான்றுகளுடன் எடுத்துக்காட்டப் பெற்றுள்ளன.

'தமிழரின் பழம்பெருஞ் சொத்தான தமிழிசையை ஆரியர்கள் எப்படியெல்லாம் திருடி, அதைத் தம்முடையது போலக் காட்டி, உலகை ஏய்க்க முற்பட்டுள்ளனர் என்பதையும், பின்னர் வெறும் பெயர், மொழி மாற்றங்களால் இடைக்காலத்தில் தமிழரை எவ்வாறெல்லாம் ஏமாளிகளாக்கியுள்ளனர்' என்பதையும், தாம் உணர்ந்த வகையில் இந்நூலில் திரு. தண்டபாணி அவர்கள் மனப்நோக விளக்கிக் காட்டியுள்ளார்.

நூல் முழுவதும் தமிழரின் இசையறிவு பற்றி விளக்கங்களைத் தெளிவாக அத்துறை அறிஞர் பலரின் எடுத்துக் காட்டுகளுடன் அவர் உணர்த்திக்காட்டும் பாங்கு சுவையானது; வியப்பானது. அவற்றுள் சில வருமாறு :

'ஆரியர் திருடிய தமிழிசைதான் இன்றைய கருநாடக இசை. தமிழகத்தில் இன்றுள்ள சூழ்நிலையைக் கண்டு தமிழர் பலர் மயங்கி, கருநாடக இசை பார்ப்பனருக்குச் சொந்தமானதென்றும், தமிழருள் இசைவேளாளருக்கு மட்டுமே ஓரளவு பரம்பரைப் பரம்பரையாகக் கைவந்த கலை என்றும தவருகக் கருதி, அதனின்றும் ஒதுங்கி விடுகின்றனர். அத்தகைய மயக்கத்தைப் போக்கி, இன்று கருநாடக இசை என்று அழைக்கப்படுவது தமிழரின் பண்டைய சொத்தான தமிழிசையே, அதை மற்றவர்களுக்குத் தாரை வார்த்துவிடுவது மாபெரும் தவறு என்பதைத் தமிழ்ப் பெருங்குடியினர் உணரச் செய்யவேண்டியது இன்றைய நிலைமையில் மிக மிக இன்றியமையாததாகும்'. (பக்:10)

'அந்நாளில் வடநாட்டைச் சேர்ந்தவர்கள் துங்கபத்திரை ஆற்றுக்குத் தெற்கே உள்ள பகுதியையெல்லாம் **கருநாடகம்** என்றே பொதுவாக அழைத்து வந்தனர். அதற்கு ஏதேதோ காரணங்கள் கூறப்படுவதுண்டு. வெள்ளைக்காரர்கள் படையெடுத்த காலத்தில்கூட இந்திய வரலாற்றில் ஆர்க்காட்டு நவாபைக் **கருநாடக நவாபு** என்றும், இங்கு நடைபெற்ற போர்களைக் **கருநாடகப் போர்கள்** என்றும் குறிப்பிடும் மரபு இருந்ததென்பது இங்கே குறிப்பிடத் தக்கது'.

'வட இந்தியாவில் 13-ஆம் நூற்றுண்டுக் காலத்தில்தான் 'இந்துசுத்தானி சங்கீதம்' உருப்பெற்று வளரத் தலைப்பட்டது. அப்போது வடநாட்டினர் தங்கள் இசையினின்றும் வேறுபடுத்திக் காட்டுவதற்காகவே தென்னகத்தில் நிலவிய இசை முறையைக் 'கருநாடக சங்கீதம்' என்றழைத்தனர். அப்பெயரே தென்னகத்திலிருந்த பண்டைத் தமிழிசை முறைக்குப் பிற்காலத்தில் நிலைத்துவிட்டது'. (பக்: 37)

'இசைத்தமிழின் அடிப்படை இலக்கணம் பற்றிய குறிப்புகள் பலவற்றைத் தொல்காப்பியத்திலும் கழகக் கால நூல்களிலும் பரவலாகக் காண்கிறோம். மேலும் கழக நூல்களுக்கு உரை எழுதிய புலவர்களும் பழந்தமிழ் இசை நூல்களிலிருந்து ஆங்காங்கே பல மேற்கோள்கள் காட்டியுள்ளனர்.' (பக்: 11)

'முற்காலத்தில் தமிழிசையில் வழங்கி வந்த ஒரு வகை ஐந்திசைப்பண் தான் இன்றைய கருநாடக இசையில் 'மோகனம்' எனும் பெயருடன் உலவி வருகின்றது." (பக்: 11)

'இயற்றமிழில் நீண்டு ஒலிக்கும் உயிரெழுத்துகளாகிய ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ ஆகியவற்றை ஏழிசைகளுக்கும் குறியீடுகளாக முதலில் அமைத்தனர். அதுதான் தமிழிசைக்கான அடிப்படையை ஏற்படுத்தியது. அடியார்க்கு நல்லார் உரை, திவாகரம் ஆகிய நூல்களிலிருந்து அதை அறிய முடிகிறது."

'இன்றுங்கூட கருநாடக இசையில் இராக ஆலாபனை செய்யும் பாடகர்கள் 'ஆ' என்றே நீட்டி இசைப்பது அந்தப் பழைய உயிரெழுத்துக் குறியீட்டின் அடிப்படையிலேதான். உண்மையில் இன்றைய கருநாடக இசை பண்டைத் தமிழிசை முறையே என்பதற்கு இதுவும் கூட ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும். முற்காலத்தில் அதற்கு '**ஆளத்தி**' என்று பெயர்'. (பக்: 14, 15)

'தமிழிசை ஏழ்பெரும் பாலைகள் ஆகப் பெருகி வளர்ந்தது. பாலை என்பது யாழில் நரம்புகளை அமைத்து வாசித்தற்குரிய முறையாகும். ஏழிசைகளுள் ஐ, ஔ ஆகிய இரு உயிரெழுத்துகள் தவிர மற்ற ஐந்தும் இன்று 'சுத்தம், பிரதி' என்றழைக்கப்படுவது போலக் குறில், நெடில் என இருவகை பெற்று, அவை மொத்தம் 12 **வீடு** அல்லது **நிலம்** எனப்பட்டன. அவற்றைத்தான் இன்று 12 'சுரஸ்தானங்கள்' என்று கூறுவர்."

'இசையொலி நுட்பத்தினை அளந்து கூறுவதால் 'அலகு' என்று பெயரிட்டனர். இக்காலத்தில் அது தான் 'சுருதி' என்று அழைக்கப்படுகிறது.'

'ஏழு இசைகளிலிருந்து 22 அலகுகளைப் பிரித்தெடுத்தது ஒரு வட்டக் கணக்கு முறையாகும். அந்த வட்ட இசை முறைக்கு **வட்டப்பாலை** என்று பெயர். அமைதியான நீரில் ஒரு கல்லைப்போட்டால் நீர் அலைகள் வட்ட வட்டமாக நகர்கின்றன அன்றோ? அதைப்போலத்தான் இசையொலி பரவுகின்றது என்பதை அன்றே உணர்ந்துதான் அவ்வாறு பெயரிட்டனர். ஒரு வட்டத்தின் குறுக்களவுக்கும் அதன் சுற்றளவுக்கும் உள்ள தொடர்பைக் கணித முறையில் 22/7 எனும் எண் குறிக்கும். அதுபோன்றதே 7 இசை ஒலிகளுக்கும் அவற்றின் 22 அலகுகளுக்கும் உள்ள தொடர்பும் ஆகும். எனவே தமிழரின் இசைமுறை கணித அடிப்படையில் இயற்கையாக வளர்ந்து எழுந்த உயரிய இசை முறையாகும்'. (பக்:15,16)

'அந்தப் பண்டைத் தமிழிசை முறையைத்தான் பிற்காலத்தில் பரதர் என்பவர் வடமொழியில் எழுதிய 'நாட்டிய சாஸ்திரம்' என்ற நூலில் உள்ள இசைப் பகுதியில் கையாண்டார்." (பக்: 16)

'பண்டைக் காலத்தில் கைகளினால் கொட்டினால் அது பாணி எனப்பட்டது; கால்களினால் தட்டினால் அது தாளம் எனப்பட்டது.' (பக்: 16)

'பாதத்தின் ஒலி என்ற பொருளில் தாள் + அம் —தாளம் எனத் தமிழர் பெயர் வைத்தனர். ஆரியர் அதையும் வடமொழிச் சொல்லாகத் திரிக்க முயன்றனர்." (பக்: 17)

'இசைத்தமிழ், வரலாற்றுக்கும் எட்டாத மிகப் பழங்காலத்தது......இசைத்தமிழில் பல நூல்கள் முற்காலத்தில் இருந்தன என்பதைத் தமிழிலக்கியங்களிலிருந்து அறிகிறோம். (பக்: 17)

'தமிழரின் இசைமுறையைத் 'தொன்முறை இயற்கை' என்றார் இளங்கோவடிகள்.'

'அக்காலத்தில் இசைத்தமிழில் மொத்தம் 11,991 பண்கள் இருந்தன என்பது தெரிய வருகிறது.' (பக்: 19)

'அந்நாள் தமிழகத்தின் ஆடவரும் பெண்டிரும் இசையறிவு மிக்கவர்களாயிருந்தனர், எனவே, பொது மக்களும் இசைநிகழ்ச்சிகளைக் கேட்டுணர்ந்து மகிழ்வெய்தினர்'.

'தன் இல்லற வாழ்வின் சிறப்பைப்பற்றி ஒரு தலைவி தன் தோழிக்குக் கூறுகையில், தான் கணவனுடன் வாழும் இன்ப வாழ்க்கைக்கு நுட்பமான இசையையே உவமையாகக் கூறுகிறாள். அகநானூறு தரும் அந்த அழகிய பாடலை எழுதியவரும் ஒரு பெண்ணே! மற்றொரு தலைவி தன் கணவன் வரும் வழியிலெங்கும் செவ்வழிப்பண் பிறக்கும் என்று பாணனிடம் கூறுகிறாள்'.

'பிள்ளைப்பேற்றின் பின் தாய் நோயுறாது காக்கச் செவ்வழிப்பண் பாடப்பட்டது எனக் கழகக் காலத்துப் பத்துப் பாட்டுகளுள் ஒன்றாகிய மதுரைக் காஞ்சி கூறுகின்றது. தான் பெற்ற குழந்தையைத் தாலாட்டத் தாய் நற்றமிழில் பாடினாள். சிறுமியர் கும்மிப் பாடல்கள் பாடி விளையாடினர். அந்நாளில் அழகிய பெண்கள் அதிகாலையில் வயற்புறத்தில் உள்ள வண்ண மலர்களை நயமாகப் பறிக்கச் சென்றபோது பாடினர்.'

(தொடர்ச்சி 5-ஆம் பக்கம்)

அகம் கரியார்

௨. 'சூத்திரத் துறவி'! —தமிழவேள்—

'சாதிமுறையானது பிராமணியத்திற்கு உயிரும் உடலும் போன்றது. பிறர்மேல் தங்கள் வல்லாண்மையை நிலைநாட்டிக் கொள்வதற்காக உருவாக்கப்பட்ட மிகமிக அச்சமானதும், மிகக் கொடியதுமான படைக் கருவியே இந்தச் சாதிமுறையாகும்.' என்கிறார் பாபுராவ்படேல்.

இந்தச் சாதிமுறை இருந்தால்தான் அவர்கள் தங்களைப் பிறப்பால் உயர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளமுடியும்; தங்களுக்கென்று தனிச் சலுகைகளைப் பெறமுடியும்; எனவேதான் பாரதக் கதையிலேயே அவர்கள் எழுதிவைத்துக் கொண்டார்கள். உதிட்டிரனிடம் வீட்டுமன் சொல்கிறான்: 'பிராமணர்களை வழிபடுவது மன்னர்களின் தலையாய கடமையாகும். குழந்தைகளைப் பாதுகாப்பதுபோல் அவர்களைப் பாதுகாக்கவேண்டும். பெற்றோர்களைத் தொழுவதுபோல் அவர்களைத் தொழவேண்டும். அவர்கள் மகிழ்வுடன் இருந்தால்தான் நாடு செழிக்கும். அவர்கள் வெறுப்பும் சினமும் கொண்டால் எல்லாம் அழிந்து கேடாகிவிடும். அவர்கள்தாம் கடவுளைப் படைப்பவர்கள். அவர்கள் யாரைப் புகழ்கிறார்களோ அவர்கள் வாழ்வர். யாரை இகழ்கிறார்களோ அவர்கள் துன்பத்தில் ஆழ்வர்'.

'அனைத்துயிர்களுக்கும் நானே கடவுள், எனக்குப் பிராமணரே கடவுள்!' என்று **கண்ணன்** கீதையில் கூறியுள்ளதாகவேறு எழுதி வைத்துக்கொண்டார்கள்.

'சூத்திரன் இம்மையில் உயிர் வாழ்க்கைக்கும் மறுமையில் முத்தி அடையவும் பிராமணனையே தொழுதல் வேண்டும்.' என்று கட்டளையிடுகிறது மனு தருமசாத்திரம்!

'சீலங் கெட்டாலும் குணங்கெட்டாலும் பிராமணனைப் பூசிக்கவும். ஆனால் குணவானேயாயினும் ஞானியே ஆயினும் சாமர்த்தியசாலியே ஆயினும் சூத்திரனைப் பூசிக்காதே!' என்று சொல்கிறது துளசிதாசு இராமாயணம்.

காந்தியார் மகனுக்குத் தன் பெண்ணைக் கொடுத்த 'சீர்திருத்தக்காரர்' என்று சொல்லப்படும் இராசகோபால் ஆச்சாரியார். சாதிப்பிரிவுகள் என்றென்றும் நிலைத்திருக்க வேண்டும் என்று விரும்பியவர். இந்தியைத் தமிழ்நாட்டில் புகுத்தியவர். குலத்தருமக் கல்வித் திட்டத்தைக் கொண்டுவந்தவர். அவர் தம் உள்ளக்கிடக்கையை இப்படிச் சொல்லியிருக்கிறார்.

'நான் வேதசாத்திர புராண இதிகாச உபநிசத்துத் தாமங்களில் முழு நம்பிக்கை உடையவன். சாதிப்பிரிவில் அதாவது வருணாசிரமத் தருமத்தில் மிக்க நம்பிக்கையும் கவலையும உடைவன். அவற்றைப் பரப்பவும் நிலை நிறுத்தவுமே நான் பாடுபடுகிறேன். இனியும் அதற்காகவே பாடுபடுவேன்!'

இவையெல்லாம் பழங்கதை என்பார்கள் சிலர். புதுக்கதையையே சொல்கிறேன்.

நடுவண் அரசுத் துறையில் பணியாற்றும் ஒருவர் புராணச் சொற்பொழிவு செய்பவர். தமிழில்தான் சொற்பொழிவு செய்பவர். என்றாலும் அவருக்கு அவரைச்சார்ந்தவர்கள் அளித்திருக்கும் பட்டங்கள் அத்தனையும் வடமொழியில்தான்! 'சாகித்திய இரத்தினம்', 'உபன்யாச சார்வபௌம', 'சிரீவித்தியா மார்த்தாண்ட', 'சிரீ இராமாயண பிரவசன சோதி', 'சிரீ இராமாயண சரபம்', 'பிரவசன துரீண', 'வியாச இருதய', 'வேதாந்த வாரிதி',— என்று இப்படிப் பல பட்டப் பெயர்களைப் பெற்றவர். தலையில் குடுமியும் இடுப்பில் 'பஞ்சகச்சமும்' ஆகக் காட்சி தருப்வர். முன்னாள் குடியரசுத் தலைவர் இராதாகிருட்டிணன் போன்ற பெரியவர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டிருப்பவர். தில்லி, பம்பாய், கல்கத்தா போன்ற வடநாட்டுப் பெருநகரங்களில் அவரைச் சேர்ந்தவர்கள் அவரை அழைத்துச் சொற்பொழிவு ஆற்றச்செய்து அவருக்குச் செய்திருக்கும் சிறப்புகள் பல.

அத்தகையவரை என் நண்பர் ஒருவருடன் ஒருமுறை காணநேர்ந்தது. நண்பரும் அந்தக் கூட்டத்தைச் சேர்த்தவர்தாம். நண்பரும் அவரும் பேசிக் கொள்ள நான் கேட்டுக்கொண்டிருந்தேன்.

நண்பர் கேட்டார்: 'இராமேசுவரம் போயிருந்தீர்களாமே?' 'ஆமாம்' என்று தொடங்கி அந்தப் புராணச் சொற்பொழிவாளர் தாம் சென்றுவந்த விவரங்களைக் கூறலானார்.

'தருமபுர ஆதினத்தில் ஒருவிழா. அந்த விழாவை ஒட்டி எங்களைப் போன்றவர்களுக்குப் பட்டுப்போர்வை கொடுப்பதாகக் கேள்விப்பட்டு நானும் போயிருந்தேன், பட்டுப்போர்வையும் வாங்கிக் கொண்டு வந்தேன்" என்றார் அவர்.

(தொடர்ச்சி 5-ஆம் பக்கம்)

தமிழன் கண்ட இசை! ... (தொடர்ச்சி)

'நிலத்தை உழுது பயிரிடும்போதும், உணவுக்காக நெல்லை உரலில் இட்டுக் குத்தும் போதும், தலையில் பெருஞ்சுமையுடன் செல்லும்போதும், களைப்பின்றி நடக்கவும் ஆணும் பெண்ணும் பாடினர். நிலக்கிழார் வந்தால் நாற்று நடும் பெண்கள் குலவை பாடிக் கொடுப்பதைப் பெற்றனர். குறமகள் வயலில் பயிரைக் காப்பதற்குக் குருவியோட்ட ஆலோலப் பாட்டுப் பாடினள். அறுவடை செய்த தவசத்தைப் பொங்கலிட்டு, ஆண்களும் பெண்களும் அகமகிழ்ந்து ஆடிப்பாடினர். வண்டியில் பொருளுடன் நெடுஞ்சாலையில் தனியாகச் செல்லுகையில், ஆண்கள் தெம்மாங்கு பாடி அச்சமின்றி வழிச்செலவு செய்தனர். கட்டுமரத்தில் மீனவர் கடலில் எட்டுந்தூரம் வரை எதிர்த்துச் செல்லவும் துணிவுபெறப் பாடினர். கலவை இடித்துக் காரை எடுக்க இந்நிலமகள் மூன்னாள் நெடுநேரம் பாடுவதுண்டு; மேடையும் திரையும் இன்றி மக்கள் எளிய ஆடையுடன் கூத்தில் ஆடிப் பாடினர்.' (பக்: 20)

'அந்த அளவுக்குத் தமிழிசை அக்காலத்தில் பொதுமக்கள் வாழ்க்கையோடு இரண்டறக் கலந்திருந்தது. எந்தப் பருவத்தில், எந்த நேரத்தில் எந்தப் பண் இனிக்கும் என்பதைக் கூடத் தமிழர் அன்றே வகுத்து வைத்திருந்தனர்.' (பக்: 21)

'அவ்வாறு பண்டைத் தமிழர் கண்டு, இயற்கையோடு ஒட்டிய வகையில் கணித முறையில் வளர்த்த அரியதோர் இசை முறையைத்தான் எங்கிருந்தோ இந்த நாட்டினுள் நுழைந்த ஆரியர் திருடி, அந்த இசை சாமவேதத்திலிருந்து தோன்றியது என்றுகூற முற்பட்டனர். அது ஓர் இமாலயப் புரட்டாகும்.'

'முற்காலத்தில் ஆரியர் இசையில் நல்விருப்பமுடையவர்களே அல்லர் என்பதுதான் அடிப்படை உண்மை'. (பக்: 21)

'ஆரியர்கள் ஓமம் வளர்த்து வேதம் ஓதுவதைத்தான் தொழிலாகக் கொண்டிருந்தார்கள். ஆரியர் ஆடல், பாடல் தொழில்களைச் செய்தால் அவர்களைப் 'பிராமணப்' பந்தியிலிருந்து விலக்க வேண்டும் என்னும் முறை உபநிடதத்தில் காணக் கிடைக்கின்றது'

'இசையற்ற முறையில் பாடம் ஒப்பிப்பது போன்றுதான் ஆரியர் முதலில் வேதம் ஓதிவந்தனர். அந்த முதல் நிலைக்குப் பெயர் '**அர்சகா**' என்பதாகும். பிற்காலத்தில்தான் சொற்களை உரத்த குரலிலும் ஓதும் முறையை ஆரியர் கடைப்பிடித்தனர். அது **வேத கானம்** எனப்பட்டது. அதுவும் இசைமுறைக் கணக்கீடு ஏதும் இல்லாததே! அந்தமுறையில் ருக் வேதப் பாடல்களைப் பலவகைகளில் திருத்தியும் மாற்றியும் மூலப் பாடங்களுக்குத் தொடர்பற்ற முறையில் ஆரியர் பாடி வந்தனர் என்று அறிஞர் கோசுவாமி கூறுகிறார்'.

'அவ்வாறு முறைகேடாக வேதப் பாடல்கள் பாடப்படுவதை ஒழுங்குபடுத்துவதற்காகவே ருக் வேதப் பாடல்களில் எளிமையானவற்றைக் கொண்டு இசையுடன் பாடத்தக்கதாகச் சாமவேதம் தொகுக்கப்பட்டது. அந்த நிலைக்குத்தான் **சாம கானம்** எனப் பெயர்.' (பக்: 22)

'சாமவேதம் எவ்வாறு பாடப்பட வேண்டும் என்பது சாமவேதப் பிராமணம் என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது. அதன்படி சாமகானத்தில் அதிகப் பக்கம் 6 சுரங்கள்தாம் இருந்தன. அந்த 6 சுரங்களுக்கும் எண் வரிசையில் பிரதமா, துவிதா, திருதியா, சதுர்த்தா, பஞ்சமா, சஷ்டா, அந்தயா எனப் பெயரிட்டனர். எனவே, சாமகானத்தில் ஒரு சுரம் குறைவாகத்தான் இருந்தது. அந்தக் குறையை எப்படியாவது சரிசெய்ய, பின்னர், ஆரியர் முனைந்து அதற்காகக் குருஷ்டா என்ற சுரத்தையும் பிறகு சேர்த்துக் கொண்டனர். ஷட்ஜம், காந்தாரம், தைவதம் முதலிய சுரப் பெயர்கள் எல்லாம் சாமவிதானப் பிராமணத்தில் கிடையாது'. (பக்: 22 23)

'எனவே, சாமகானம் என்பதும், சரியான இசைக் கணக்கு முறையும் சுரங்களின் இடைவெளி அமைப்பும் இன்றி, அவரவர் விரும்பியவாறு தாறுமாறாகப் பாடப் பட்டதுதான். ஆனால் தமிழிசையோ இசைஒலிக் கணக்கை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆதாரச் சுரம் ஒன்றை முதலில் அமைத்துக் கொள்ளாதது சாமகானம். குரல் என்னும் ஆதாரச் சுரத்தை அளந்து அமைத்துக்கொண்டது தமிழிசை; ஏழிசை எனப் பண்டைக் காலத்திலேயே பெயர் பெற்றது.'

'**சாமகானம் ஒழுங்கற்ற இசை என்று மனுவே கூறியுள்ளார்.** அந்தச் சாம கானத்தை மக்கள் விரும்பவில்லை, 'எனவே, அது நாளடைவில் இழிந்த நிலையை அடைந்தது. அவ்வாறிருக்க, **சாம வேதத்திலிருந்து இந்திய இசை முறைகள் வந்தன என்று ஆரியர் கூறப் புகுந்தது எவ்வளவு பெரும் புரட்டு!**"

'சாம வேதத்திலிருந்து இசை பிறந்தது என்று ஆரியர் கூறமுற்பட்டது வேத அடிப்படையாகத்தான் சுரங்கள் தோன்றின என்று மக்களை ஏமாற்றுவதற்காகத்தான். ஆனால், உண்மையில் சாம வேதத்துக்கு முன்பே நெடுங்காலமாகத் தமிழகத்தில் வழங்கிவந்த இசைத்தமிழிலே ஏழு சுரங்களும் ஏற்கனவே நிலைபெற்றிருந்தவையாகும்.'

'வடமொழியில் முதலில் தோன்றிய இசைநூலே 5-ஆவது நூற்றாண்டில் பரதர் எழுதிய 'பரதசாஸ்திரம்' தான். அவர்தாம் சாமவேதத்திலிருந்து சங்கீதம் பிறந்தது என்ற புரட்டை எழுப்பியவர். ஆனால் அவரே 'விந்திய மலைக்கும் தென்கடலுக்கும் இடையிலுள்ள தென்னாட்டார் பாட்டிலும் பல இசைக்கருவிகள் வாசிப்பதிலும, கூத்திலும் மிக்க திறமை வாய்ந்தவர்கள்" என வியந்து போற்றியுள்ளார்.' (பக்: 23)

'பரதரின் நூலையே பெரும்பாலும் அடிப்படையாகக் கொண்டு சாரங்கதேவர் என்பவர் 13-ஆம் நூற்றாண்டில் 'சங்கீத ரத்தினகரம்' என்னும் இசை நூலை எழுதினார். அதைப் பின்பற்றியே பின்னர் எழுந்த இசையிலக்கண நூல்களும் தமிழ்நாட்டில்கூட வடமொழியிலேயே எழுதப்பட்டன. எனவே தமிழகத்தின் இசைத்துறையில் வடசொற்கள் அதிகமாக வழக்குக்கு வரத்தொடங்கித் தமிழ்ச் சொற்கள் படிப்படியாக மறையத் தொடங்கின. தமிழகத்தின் ஊர்ப் பெயர்களை வடமொழியில் வேதாரண்யம், கும்பகோணம் என்றெல்லாம் திட்டமிட்டு மாற்றியது போலவே இசைத் துறையிலும் அவ்வாறு திட்டமிட்டுச் செய்து வந்தனர். பல தூய தமிழ்ச் சொற்களைக் கூட வடமொழிச் சொற்களாகத் திரித்துக் காட்ட முனைந்தனர். தமிழிசைக்கு அன்று நேர்ந்து வந்த பேரேதத்தைக் குறித்துச் சிந்திக்காமல், அதைத் தடுப்பதற்குச் சிறிதும் முயற்சி செய்யாமல் அன்றைய தமிழிசைக் கலைஞர்களும் தூங்கிக் கிடந்தனர். எனவேதான் ஆரியரின் திட்டம் அன்று எளிதில் வெற்றிபெற முடிந்தது.' (பக்: 24)

'தமிழர் ஏழு இசையொலிகளுக்கும் முதலில் உயிரெழுத்துகளைக் குறியீடுகளாக வைத்தனர். காலப் போக்கில் அந்த ஏழிசைகளுக்கும் பொருத்தமான தமிழ் எழுத்துகளாகிய ச ரி க ம ப த நி என்பவற்றைக் குறியீடுகளாக மாற்றி அமைத்திருந்தவர்களும் தமிழர்கள்தாம். வாய்ப்பாட்டுக்கு மட்டுமல்லாமல் இசைக் கருவிகளை வாசிக்கக் கூடத் தமிழர் பின்னர் எழுத்துகளைப் பயன்படுத்தினர்.' (பக்: 24)

'ஏறத்தாழ 700 ஆண்டுகளுக்கு முன்பு சாரங்கதேவர்தாம் தமிழிசை முறையில் வழங்கிவந்த சரிகமபதநி என்னும் ஏழு குறியீடுகளுக்கும் வடமொழியில் பெயர்களை வலியக் கொடுத்து, ஏழு சுரங்களும் வடமொழியிலிருந்து 'வந்தன என்ற பெரும் புரட்டை ஏற்படுத்தினார். அப்படி ஏமாற்றுவதற்காகவே தமிழ்க் குறியீடாகிய 'ச' என்பதற்குப் பகரமாக வடமொழியின் 'ஸ' எழுத்தையும் அதுமுதல் திட்டமிட்டுப் பயன்படுத்தத் தொடங்கினர்." (பக்: 25)

'நமது இசைமுறையில் வந்த ஏழு சுரங்களுக்கும் ஆரியர் சூட்டியுள்ள வடமொழிப் பெயர்களைக் கவனித்தால், அதுவும் ஓர் இமாலயப் புரட்டுத்தான் என்பதை நாம் நன்குணர முடியும்.

ச—ஷட்ஜம்; ரி—ருஷபம்; க—காந்தாரம்;
ம—மத்திமம்; ப—பஞ்சமம்; த—தைவதம்;
நி—நிஷாதம்.

'இங்குக் குறிப்பிட்டுள்ள ஏழு வடமொழிப் பெயர்களின் முதல் எழுத்துகளைத்தான் ஏழு சுரங்களுக்கும் குறியீடுகளாக வைத்துள்ளதாக ஆரியர் கூறிக் கொள்வர். அப்படியாயின் முதல் சுரம்'ஷ' என்றன்றோ இருக்கவேண்டும்? ஆனால் 'ஷ' என்பது 'ஸ' ஆக வழங்கப்படுவதற்கு எவ்வகை அடிப்படையும் இல்லை." (பக் 26-27)

'உண்மையில் ஷட்ஜம் என்னும் வடமொழிச் சொல்லுக்கு 'ஆறிலிருநது பிறந்தது' என்பது பொருள். அதாவது சாமகானத்தில் இருந்த ஆறு சுரங்களோடு பின்னர் ஏழாவதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட சுரமாகும்."

'அடுத்தபடியாக ருஷபம் என்ற பெயர்ச் சொல்லிலிருந்து 'ரி' என்னும் எழுத்து குறியீடாக வருவதற்கும் எவ்வகை அடிப்படையும் இல்லை. அதேபோல், காந்தாரம் என்ற சொல்லின் முதல் எழுத்து 'க' வினைக் குறுகி வருவதற்கும், தைவதம் என்ற சொல்லில் உள்ள 'தை' என்னும் முதல் எழுத்து 'த' என்று ஆவதற்கும் எவ்வகை அடிப்படையும் இல்லை. 'ம' என்னும் சுரம் அடிப்படை ஷட்ஜத்துக்கு நடுவில் வருவதால் மத்திமம் என்று கூறியதும், 'ப' என்னும் சுரம் ஐந்தாவதாய் வருவதால் பஞ்சமம் என்றதும், நிஷாதம் என்பதிலுள்ள முதலெழுத்து 'நி' என்றதும் மட்டுந்தான் சற்றுப் பொருந்தின " (பக்: 27)

'இந்த அரிய உண்மையைத்தான் .. ஷட்ஜா என்கிற பதத்திலிருந்து 'ச'வும், ருஷப என்கிற பதத்திலிருந்து 'ரி'யும், காந்தார என்கிற பதத்திலிருந்து 'க' வும், மத்திம என்கிற பதத்திலிருந்து 'ம'வும், பஞ்சம என்கிற பதத்திலிருந்து 'ப'வும்' தைவத என்கிற பதத்திலிருந்து 'த'வும, நிஷாத என்கிற பதத்திலிருந்து 'நி'யும் வந்தனவென்று உரைக்கில், 'ஷ' என்கிற, சமஸ்கிருத அட்சரம் ஸ என்கிற மாறுதலை அடைவதற்கும், 'ரு' என்கிற சமற்கிருத உயிரெழுத்து 'ரி' என்று சமற்கிருத மெய்யெழுத்தாக மாறுகிறதற்கும், 'கா' என்கிற தீர்க்கம் 'க' என்று குறுகுவதற்கும், தைவத என்பதில் 'த" என்று அகர வடிவமைந்து வருவதற்கும் யாதொரு சமஸ்கிருத வியாகரணபிரமாணம் காணமுடியாமையாலும் ஷ - ஜா முதலிய ஏழு பதங்களும் காரணச் சொற்கள் என்று காட்டுவதற்காக 'ரிஷப, காந்தார, தைவத' என்கிற மூன்று பதங்களின் பொருள் ஆராயச்சியில் சுரங்களைச் சம்மந்தித்தவைகளாகவே சாரங்கதேவர் விவரிப்பதால் ஷட்ஜ, மத்திம, பஞ்சம, நிஷாத என்கிற உரைகள் சுரங்களையே சம்பந்தித்ததெனக் கூறுவது கிரமமில்லாமையும் அபந்நியாயத்தையும் ஷண்ட, ருதம' காத்ரம், மதுரம், பட்டலம், தைரியம் முதலான சமஸ்கிருதப் பதங்களில் முதல் அக்ஷரமாக அதிப்பிரசிங்கிப்பதாலும் **திராவிடர்கள் அமைத்த இடுகுறிப் பெயரை மாற்றுவதற்** கெடுத்த புரட்டுபாயமென்று தீர்மானிக்கப்படுகிறது' என்று மறைத்திருவாளர் நாராயண சாஸ்திரிகள் மிக அழகாக எடுத்துக் காட்டியுள்ளார். (பக்: 27-28)

'சாமகானத்தை 7 சுரங்களில் முறையாகப் பாடவல்ல இசைவாணர்களாம் 500 தமிழர்கள் வடக்கே இருந்த வெங்கி நாட்டுக்குக் கி.பி 12-ஆம் நூற்றாண்டில் அனுப்பி வைக்கப்பட்டனர் என்று குலோத்துங்க சோழ மன்னன் வரைந்துள்ள செப்பேடு கூறுகின்றது. அவர்கள்தாம் வடநாட்டில் இருந்த ஆரியர்க்குச் சாமகானத்தை 7 சுரங்களில் முறையாகப் பாடப் பயிற்சியளித்தனர். அவர்களுடைய பரம்பரையினர் இப்போதும் அங்கே திராவிடர் என்றே அழைக்கப் படுகின்றனர்." (பக்: 29)

'அத்தகைய சூழ்நிலையில் வடக்கே **மார்க்க இசை** என்னும் இசைமுறை தோன்றியது.......... நாரதர் பூலோகத்தில அவதாரமெடுத்து இசைக்கு இலக்கணம் வகுத்தார் என்ற புராணக்கதை அந்த மார்க்க இசையைப் பற்றித்தான்." (பக்: 30)

'மார்க்கம்' என்றால் செம்மையான வழி என்று பொருள். அதாவது '**செவ்வழி**'; பழங்காலத்தில் செவ்வழி என்னும் இசை தமிழகமெங்கும் பரவியிருந்தது என்ற உண்மையைக் கழக இலக்கிய நூல்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. தொடக்கத்தில் ஒரு நிலத்தில் தோன்றிய முல்லைப்பண் தமிழகமெங்கும் பரவிய போது, அதற்குச் செவ்வழி என்னும் பெயர் ஏற்படுவதாயிற்று. எனவே மார்க்க இசை என்பது தமிழிசையின் செவ்வழி முறையேயாகும்'. (பக்: 31)

'காலப்போக்கில், மார்க்க இசையில் கைதேர்ந்த கந்தர்வர் என்ற ஓர் இனத்தார் இசை பாடுவதைத் தொழிலாகக் கொண்டவர்கள் முன்வந்து, நாட்டு மக்கள் விரும்புமாறு மார்க்க இசையைப் பரவச் செய்தனர். இக் கந்தர்வ இசை மார்க்க இசையே என வலியுறுத்திக் கூறி அது பழமையான சிறந்த இசை நலம் கொண்டது, தெய்வீகப் புனிதமானது என்றும் கல்லிநாதர் கூறுகிறார்.' (பக்: 31)

'கந்தர்வர் தமிழினத்தவர் என்று தமிழ்ப்பேராசிரியர் மு. இராகவையங்கார் 'தமிழ் வரலாறு' என்னும் நூலில் கூறியுள்ளார். பாணர்கள் யாழைக் கொண்டு இசை பாடுவதையே தொழிலாகக் கொண்டவர்கள். ஆகையால் பாணர்களுக்கு யாழோர் என்ற பெயரும் உண்டு. 'யாழோர் என்பதன் நேர் வடமொழியாக்கந்தான் கந்தர்வர் என்பதாம்.' (பக்: 31-32)

'அவர்களுடைய பழந்தமிழ் நிலக் களவொழுக்கத் திருமண முறைக்கும் வடநாட்டில் **கந்தர்வம்** எனப் பெயர் ஏற்பட்டது!' (பக்: 32)

'தொல்காப்பியர் கூறும் பண்பட்ட தமிழிசை கி.பி. 3-ஆம் நூற்றாண்டு வரையிலும் மிக உயர்ந்த நிலையில் இருந்தது. அதன் பிறகு தமிழ் நாட்டில் இசைத்தமிழும் நாடகத் தமிழும் வீழத் தொடங்கிய தற்கு முகாமையான காரணம் வடக்கேயிருந்து வந்த மதக்கொள்கையாளர்களே! அறமே யாவரும் பின்பற்றுதற்குரியது என்றும், இசையினல்

(தொடர்ச்சி 7-ஆம் பக்கம்)

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

'ஆதீனத் தலைவரைப்பார்த்து வணங்கினீர்களா?' என்று வினவினார் நண்பர்.

'சூத்திரச் சந்நியாசியைப் போய் நான் நமச்காரம் பண்ணுவேனா? பண்ணவில்லை!" என்றார் அவர்.

தருமபுர ஆதீன மடத்தின் தலைவர் ஒருதமிழர். எனவே அவர் சூத்திரராம்! அவரைப் பிராமணராகப் பிறந்துவிட்ட ஒருவர் வணங்கக்கூடாதாம். வணங்கவில்லையாம்!

ஓர் ஆத்திகத் தமிழரையே-ஒரு மடத்தின் தலைவரையே-வடமொழியை ஆதரிப்பவரையே 'சூத்திரத் துறவி' என்று அவர் இழித்துக் கூறுகிறார் என்றால், என்ன சொல்வது? தமிழரைச் சூத்திரர் என்று சொல்லிவந்த காலம் எங்கே மலையேறி விட்டது?

உலக நடப்பு!

சிறையில் கொடுமை!

o பீகார் மாநிலத்தில் உள்ள சாம்செட்பூர் மாவட்டச் சிறையில் 200 பேர்களுக்கே வசதிகள் உள்ளன. ஆனல் இப்பொழுது 900 பேர்கள் அங்கு அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். அங்கு எலும்புருக்கி நோயும் தொழுநோயும் உள்ளவர்கள் மற்ற சிறையாளிகளிடம் சேர்த்தே வைக்கப்பட்டுள்ளனர். இதை உயர் மீமிசை மன்றம் மிகக் கடுமையாகக் கண்டித்துள்ளது.

வங்கதேசப் பெண்கள் விற்பனே

o வங்கதேசப் பெண்களைப் பாக்கிசுத்தானுக்குக் கொண்டு வந்து விற்பனே செய்வதில் பாக்கிசுத்தானில் உள்ள ஒரு கும்பல் ஈடுபட்டுள்ளது என்றும், இதன் நடவடிக்கைகள் நாளுக்கு நாள் பெருகி வருகின்றன என்றும் 'சங்' என்னும் உருதுச் செய்தித்தாள் கூறுகிறது.

பிடி ஆணை இல்லாமல் சிறைப்படுத்தலாம்!

o நடுவணரசுத் தொழில் நிறுவனங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் தொழில் பாதுகாப்புப் படையைக் கருவிப்படையாக மாற்றிப் பிடி ஆணையின்றிச் சிறைசெய்வது உட்பட, கூடுதல் அதிகாரங்களை அளிப்பதற்கான திருத்தச் சட்டவரைவு பாராளுமன்றத்தில் கடந்த மாதம் நிறைவேறியது. எதிர்க் கட்சிகள் இதைக் 'கருப்புச் சட்டம்' என்றும் 'தொழிலாளர் பகைச் சட்டம்' என்றும் கூறிக் கண்டித்தன.

பாக்கிசுத்தானில் கிறித்துவர் போராட்டம்!

o பாக்கிசுத்தானில் அரசுக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள வானொலி மற்றும் தொலைக்காட்சி அமைப்புகளில் சிறுபான்மையினர் தங்களின் மதத் தொடர்பான நிகழ்ச்சிகளை ஒலி, ஒளிபரப்ப அனுமதிக்கப்பட வேண்டும் என்று கோரிக் கிறித்துவர் தலைவர் சேம்சு சாலிக் சாகும்வரை உண்ணு நோன்பு மேற்கொண்டு சிறைப்படுத்தப்பட்டுள்ளார். தங்களது கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் பெரிய போராட்டம் தொடங்கப்படும் என்று மற்றொரு கிறித்துவத் தலைவர் அனயாட்பாடி கூறியுள்ளார்.

'இந்தி' 31 நாடுகளில் கற்பிக்கப்படுகிறது!

o இந்திமொழி 31 நாடுகளில் மொத்தம் 90 பல்கலைக் கழகங்களில் சொல்லித்தரப்படுகிறது என்று, வெளிநாட்டு அரசு அமைச்சர் ஏ.ஏ. ரசீம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க விண்கலத்தில் முதல் தடவையாக ஒரு பெண்!

o வரும் சூன் மாதம் 18-ஆம் பக்கல் அமெரிக்க விண்வெளியில் செலுத்தவிருக்கும் 'சேலஞ்சா' என்னும் விண்வெளி ஓடத்தில் செல்லவிருக்கும் ஐந்து விண்வெளி ஆய்வு அறிஞர்களுள் ஒருவர் பெண்ணாக இருப்பார். அவர் பெயர் சாலி. கே. ரைட் என்பதாகும்.

உருபா மதிப்பின் வீழ்ச்சி

o 1960 ஆம் ஆண்டில் இருந்த ஓர் உருபா இப்பொழுது (1983 மார்ச்சு இறுதியில்) 19 92 காசாக மதிக்கப்படுகிறது என்று, நடுவண் பொருள் அமைச்சர் பிரணவகுமார் முகர்சி தெரிவித்தார். இது 1973-இல் 46.30 காசுக்கு மதிக்கப் பெற்றது.

சுரங்கங்களில் சிறுவர் வேலை செய்யத் தடை!

o சுரங்கங்களில் அல்லது சுரங்கப் பகுதியில் 18 அகவைக்குக் குறைந்த சிறுவர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ளத் தடைசெய்யும் சட்டவரைவை அரசு கொண்டு வந்துள்ளது.

உலகிலேயே இந்தியக் காவல்துறை சிறந்தது!

o உலகிலேயே இந்தியக் காவல்துறையின் பணிதான் சிறந்ததாக உள்ளது என்றும், உயர் காவல் அதிகாரி முதல் பொதுநிலைக் காவலர் வரை நாட்டில் உள்ள பெண் காவலர்கள் தமிழகத்தில்தான் அதிக எண்ணிக்கையில் உள்ளனர் என்றும் காவல்துறை இயக்குநர் இராதாகிருட்டிணன் குறிப்பிடுகிறார்.

காந்தி திரைப்படத்தைத் தடைசெய்ய வேண்டும் எனப் பாக்கிசுத்தானில் வழக்கு!

o 'காந்தி' திரைப்படத்தில் முகம்மதலி சின்னு, பாக்கிசுத்தானின் முன்னுள் முதல்வர் சுராவர்த்தி ஆகியோரை இழிவுபடுத்தும் வகையில் காட்டப்பட்டுள்ளதாகவும், எனவே அந்தப் படத்தைத் தடை செய்து அறிவிக்க வேண்டும் என்றும், அப்படத்தின் உருவாக்குநரும், இயக்குநருமான ரிச்சர்டு அட்டன்பரோ 50 இலக்கம் டாலர்கள் (ஏறத்தாழ 5 கோடி உருபா) இழப்பீடு தரவேண்டும் என்றும், 'காந்தி' திரைப்படத்தின் மூலப் படியையும், அப்படத்தின் தொலைக்காட்டிச் சுருளையும் அழிக்க வேண்டும் என்றும், பாக்கிசுத்தான் முசுலிம் லீக் கட்சியைச் சேர்ந்த மகமூத் உல் உசுமானி என்னும் ஒருவர், சிந்து மாநில உயர்நெறி மன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளார். இவ்வழக்கு வரும் சூன் 1-இல் உசாவலுக்கு வருகிறது. O

உங்கள் மடல்கள்

0 தமிழ்நிலத்தின் ஆசிரியவுரை மிகச்சிறப்பாக உள்ளது. இதழ்கள் வெளிவரும் நாளை அன்பர்கள் அனைவரும் ஆவலாய் எதிர்பார்க்கிறோம்.. தமிழ்நிலம் தொடக்க விழாவில் தாங்கள் ஆற்றிய உரை மிகச் சிறப்பாக உள்ளது. சிந்தனையைத் தூண்டுகிறது

தமிழ்நிலத்தில் பார்ப்பனரை ஒட்டுமொத்தமாகத் திட்டுவதா வேண்டாமா என்பதை நீங்கள் முடிவெடுப்பதுதான் சரி. பார்ப்பனரை ஒரேயடியாக ஏசுவது நம் இயக்கம் 'திராவிடர் கழகத்தின் துணைக்கழகம்' என்ற எண்ணம் அறியாத மக்களின் மனத்தில் உண்டாக வாய்ப்புண்டு. பின்னர் அவர்கள் நம் இயக்கமும் இறையிலிகளின் கூட்டம் எனத் தவறுகப் பொருள் கொண்டு உங்களின் அறிவூட்ட முயற்சிக்கும், பணிக்குமே தடையாயிருக்கலாம். பின்னர் நம்மைப் புறக்கணிக்கலாம். இது நம் இயக்கம் ஏழை, எளிய மக்களுடன் அணுகுவதற்குத் தடையாக இருக்கலாம். அதற்குப் பகரமாக நம்மினம் எங்ஙனம் வாழ, வளர ஒன்றுபட வேண்டும் என்பதையும், எதிரிகளை முறியடிக்க நம் உ.த.மு.க.வின் உயரிய ஏழு கொள்கைகளை விளக்கும் செய்திகள். கட்டுரைகள், துணுக்குகள் போன்றவற்றிற்கு மட்டும் முதலிடம் கொடுத்தால் உங்களின் அறிவூட்ட முயற்சிக்கு எளிதில், விரைவில் பயன் கிட்டும் என்பதையும் உறுதிப்படுத்தும். 'அண்ணுவும்—தம்பியும்' ஒரு சிறந்த பகுதி. தொடர்ந்து வெளியிடுங்கள்.

திருச்சியில் திரு. அரவரசன் அவர்களிடம் அண்மையில் உரையாடிக் கொண்டிருந்தபொழுது தங்களைப் போன்ற மெய்யுணர்வாளர்கள் எழுதும் உண்மையான உரையே திருக்குறளுக்குத் தேவையென முடிவெடுத்தோம். திருக்குறள் மெய்ப்பொருளுரை வெளிவரும் நன்னளை எதிர்பார்க்கிறோம். வணக்கம். -- த. கரிகாலன். கடையநல்லூர்.

0 பேரன்புடையீர்! வணக்கம். தங்களது 'தமிழ்நிலம்' உலகத் தமிழின முன்னேற்றத்திற்கு வழிகாட்டி. இங்கே தமிழ் ஆர்வலர்கள் தங்களின் கிழமை இதழைப் படிக்க ஆவல் கொண்டுள்ளனர். அத்துடன் இவ்விதழை அறிமுகம் செய்ய நான் முயற்சி செய்து வருகின்றேன்,

— இரா. ப. தங்கமணி, பினங்கு.

0 'தமிழ்நிலம்' எண் 17 சிறப்பாக இருந்தது. பொதுத் தொண்டன்' அவர்களின் 'பொதுவுடைமையா பொதுவுரிமையா?' என்ற ஆய்வுக் கட்டுரை சிறப்பாக அமைந்திருந்தது.

— மெய். அருண்மொழியன், கடல் மீன்வளம்.

0 தமிழ்ப் பெருந்தகையீர்! தலைதாழ்ந்த வணக்கங்கள். தங்கள் தமிழினப் பணி தடையின்றித் தொடரத் துடித்தேங்கி வேண்டுகிறேன். தங்கள் மீதே நேரடியாகக் குற்றஞ்சாட்டி நான் விடுத்த மடலைத் தென்மொழியில் வெளியிட்ட தங்களின் வெள்ளையுள்ளத்தை எண்ணியெண்ணி இறும்பூதடைகின்றேன்.

இன்றைய இக்கட்டான சூழலில் தங்களை விட்டால் தமிழுக்கும் இனத்துக்கும் விடிவு பிறக்க வழியில்லை. எனவே மீண்டும் மீண்டும் அன்புடன் வேண்டுகிறேன். தொய்வுக்கு இடம் தந்துவிடாதீர்கள்! தமிழினக் காப்புக்குத் தமிழ் கூறு நல்லுலகம் தங்களையே முழுமையாக நம்பியிருக்கிறது என்பதை மறந்துவிடாதீர்கள்! 'தமிழ்நிலம்' வளர்ச்சிக்கு முதற்கட்டமாக உருபா 5 விடுத்துள்ளேன். — புலவர், மு. சொக்கப்பன். க.மு., இல.இ. திருப்பராய்த்துறை.

0 அன்புள்ள ஐயா! வணக்கம். தங்களின் எழுத்தும் செயலும் என்னை மிகவும் கவர்ந்துவிட்டன. தங்களின் மேலான சிறப்புகள் எல்லாம் நண்பர்களின் மூலம் அறிந்தேன். தனித்தமிழுக்காக உழைக்கக் கூடியவர் நீங்கள் ஒருவரே என்பதில் மறுப்பு இருக்க முடியாது.

பல ஆண்டுகளாகத் தமிழ் நிலத்தையும் தமிழரையும் நல்வழிப்படுத்த அரும்பாடுபட்டு வருகின்றீர்கள். இதனை என் போன்ற பல தமிழ் நெஞ்சங்கள் நன்கு உணர்கின்றன. சிலர் போற்றுவர்; சிலர் தூற்றுவர். இஃது உலக இயற்கையே என்று உணர்ந்தோ என்னவோ, எந்த ஒரு புயலுக்கும் அஞ்சாது, தங்களின் அரிமா நடையில் என்றும் தாங்கள் வலுவிழக்கவில்லை. இந்த மூப்புக் காலத்தும் அயற்சியற, தமிழ் மாந்தனைக் காக்கத் தொண்டாற்றி வரும் நீங்கள் பல்லாண்டுக் காலம் நலமுடன் வாழ்ந்து என்போன்ற இளைஞர்களுக்கு நல்வழி புகட்ட வேண்டுமென்று தமிழ்த்தாயை இறைஞ்சுகின்றேன். அன்புள்ள

— தாழை. ந. இளவழகன், மணப்பாறை

0 அன்புள்ள ஐயா! தமிழினத்தின் பாசறையாகவும் ஆராய்ச்சி மணியாகவும் 'தமிழ் நிலம்' விளங்குகிறது. ஒவ்வொரு தமிழ்மறவனின் கைகளிலும் இருக்க வேண்டிய போர்வாள், — நாஞ்சில்சிவா. மார்த்தாண்டம், கன்னியாகுமரி.

0 அன்புசான்ற ஐயா! வணக்கம். தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நிலம் உயர்வே தங்களின் உயிர்ப்பென வாழ்ந்து எங்களுக்கு விழிப்பினைக் காட்டும் உங்கள் உழைப்பினை இன்னும் ஒருகோடி ஆண்டுகள் உயர்வோடுவாழ்ந்து எம்மோர் உயிராக வேண்டும். — சீனு. அரிமாப்பாண்டியன, புதுவை-10.

0 எல்லா உரிமைகளும்
ஏற்க பிறப்பெடுத்தோர்
இல்லா நிலையை
அடைவதுதான் ஏனென்று
சொல்லால் எழுத்தால்
செயலால் பெறவிழையும்
வல்ல 'தமிழ் நிலமே' வாழ்!

— மா. தமிமன்பன். சித்தியவான், மலேசியா.

0 மானமிகு உ.த.மு.க. முதல்வர் அவர்கட்கு, வணக்கம் பல. தங்கள் இயக்கத்தின் உயர்ந்த கொள்கைகளைத் தங்கள் 'தமிழ்நிலம்' இதழ் வழித் தொடர்ந்து படிக்கின்ற நான், தங்களின் பேருரையையும் படித்தேன். மிக்க மகிழ்ச்சியடைந்தேன். தமிழன் இன்று இனப்பற்று இல்லாமலும், தமிழ் மொழிப் பற்றில்லாமலும் இருக்கின்ற இந்நேரம், தங்கள் தமிழ்நிலம் சொரணையற்றவனுக்குச் சூடு ஏற்றும் என்று நம்புகின்றேன். உங்கள் தொண்டு வளர்க! உங்கள் தூய பணி தொடரட்டும்! 'தமிழ்நிலம்' வளரட்டும்! தாங்கள் வாழ்க பல்லாண்டு! — சோ. தமிழ் விருப்பி, பொள்ளாச்சி.

கருநாடக மாநிலத்தில், தமிழ்க் கிறித்துவரைக் கன்னடக் கிறித்துவர் தாக்குவதாக முறையீடு!

வெங்காலூரில் வாழும் தமிழ்க் கத்தோலிக்கக் கிறித்துவர்கள் அங்குள்ள கன்னட மொழி பேசுபவர்களால் பெரிதும் தொல்லைக்கு ஆட்படுத்தப்படுவதாகக் கர்நாடகத் தமிழ்க்கிறித்தவர் பொதுநலக் கழகத்தின் பொதுச் செயலாளர் திரு அ. சா. ஆரோக்கியதாசு தெரிவித்தார். தமிழ்மொழி பேசுவோர் என்ற ஒரேகாரணத்துக்காகத் தமிழ்க் கத்தோலிக்கக் கிறித்தவர்களைக் கன்னடமொழி பேசும் கிறித்தவர்கள் தரக் குறைவாகப் பேசியும், தாக்கியும் வருவதாகவும், தமிழ் மதக் குருக்களையும் அவர்கள் தாக்கி, அவர்களைத் தமிழ்நாட்டுக்குச் செல்லும்படி மிரட்டுவதாகவும் சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் கூறினர்.

வெங்காலூரிலுள்ள கிறித்துவக் கோயில்களில் நெடுங் காலமாகத் தமிழ்மொழியிலேயே வழிபாடுகள் நடத்தப்பட்டு வருவதைக் கடந்த மார்ச்சு மாதம் முதல் நிறுத்திவிட்டுக், கன்னட மொழியிலேயே சிறப்பு வழிபாடு நடத்தப்பட வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டு வருகிறது இஃது இந்திய அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள தாய்மொழியில் வழிபாடு செய்யும் உரிமையை மறுக்கும் செயலாகும் என்றும் அவர் கூறினர்.

வெங்காலூரில் தமிழ்க் கத்தோலிக்கக் கிறித்துவர் படுகின்ற துன்பங்களை வெளி மாநிலங்களில் உள்ள தமிழர்களும் புரிந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் தமிழ் நாட்டில் உள்ள பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த முகாமைத்தலைவர்களைச் சந்தித்துத் தமிழ்க்கிறித்துவர்களுக்குக் கர்நாடகத்தில் பாதுகாப்பு இல்லாத நிலையை எடுத்துக் காட்டித் தக்க பாதுகாப்பு வழங்க உதவ வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வருகிறோம் என்று திரு. ஆரோக்கியதாசு தெரிவித்தார்.

தங்களுடைய நிலையை அனைத்து மக்களுக்கும் உணர்த்த வேண்டி, வரும் 22-ஆம் பக்கல் அன்று வெங்காலூரில் ஒரு பேரணி நடத்தவிருப்பதாகவும் அவர் கூறினர். அங்கு வாழும் ஏறத்தாழ இரண்டு இலக்கக் கத்தோலிக்கர்களில் ஒன்றரை இலக்கத்துக்கும் மேற்பட்டவர்கள் தமிழர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

— செய்தி. 'தினமணி' மே-11

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்பமும், நாடகத்தால் காமமும் பெருகுமென்றும் அவர்கள் கருதினர். அக்காலத்திலிருந்த அரசர்களுக்கும் அவர்கள் கேடான இக்கருத்தைக் கூறி வந்தனர். அதன் விளைவாகப் பண்ணைத் தமிழிசையும் யாழும் தேயத் தொடங்கின. அந்நாளிலிருந்தே இசை நூல்கள், நாடக நூல்கள் பல அழிக்கப்பட்டன.''
—(பக்: 33)

''தமிழகத்தின் மேல் அடிக்கடி படையெடுத்து ஆளுமை செலுத்தி வந்த பிறமொழியாளர்களாலும் தமிழகத்தின் நுண் கலைகள் பெரிதும் நலிவடைந்தன. எங்கிருந்தோ வந்த களப்பிரர் எனும் கூட்டத்தார் கி. பி. 3-ஆம் நூற்றாண்டில் இருந்து கி. பி. 6-ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தை ஆண்டு கொண்டிருந்தனர். அக்காலத்தைத் தமிழகத்தின் 'இருண்ட காலம்' என்று வரலாற்று ஆசிரியர் கூறுவர். அப்பொழுதும் தமிழகத்தின் அருங்கலைகள் அழிந்தன. அதன் பிறகு கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் தான் தமிழிசை மீண்டும் தலையெடுத்தது. கி. பி 13 ஆம் நூற்றாண்டு வரையிலும் தமிழகத்தில் இசைத் துறைகளும் தமிழ் மரபினை ஒட்டியே வழக்கில் இருந்து வந்தன.'' ''அதற்குப் பிறகு தமிழிசை படுத்துவிட்டது. தமிழகம் தமிழ் வேந்தர் ஆட்சியினின்றும் மாறி அயலவருக்கு அடிமைப்படத் தொடங்கியதே அதற்கு காரணம்''
—(பக். 33—34)

'கி. பி. 13. ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு தமிழகத்தில் இசை நூல்களையும் வடமொழியில் எழுதும் வழக்கமேற்பட்டது. பண், பண்ணியற்றிறம், திறம், திறத்திறம் முதலிய தமிழ்ப் பெயர்களைச் சம்பூர்ணம், ஷாடவம், அவ்வம், சதுர்த்தம் என வடமொழிப் பெயர்களாக மாற்றினர். அடியார்க்கு நல்லார் உரையிலிருந்து இது தெரிகிறது.''
(பக். 34.)

''தமிழ் நாட்டில் பிறந்து, தமிழ்நாட்டு உப்பையே தின்று, தமிழையே தாய்மொழியாகக் கொண்டிருந்தும் பார்ப்பனர்கள் தாங்கள் பயின்ற இசைமுறை, அதன் இலக்கண வகை முதலியவை குறித்துப் பல நூல்களைத் தமிழில் எழுதாமல் வடமொழியிலேயே எழுதி வைத்தனர்.',
(பக்: 34)

''ஏறத்தாழ 400 ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சை அரசர் அச்சுதப்ப நாயக்கரிடம் மந்திரியாயிருந்த கோவிந்த தீட்சதர் என்பவரின் குமாரர் வெங்கடமகி பண்களை (இராகங்களை) வரிசைப்படுத்திச் 'சதுர்த்தண்டிப் பிரகாசிகை' என்ற நூலை எழுதினர். தமிழகத்தில் வழங்கி வந்த இசை முறையைத்தான் அவர் அந்த நூலில் எழுதிவைத்துள்ளார். அப்படியிருந்தும் அதைத் தமிழில் எழுதாமல் வடமொழியில் தான் எழுதியுள்ளார். அதில் வரும் 72 மேளகர்த்தாவுக்கும் இராகமாலிகை பாடிய மகாவைத்தியநாதய்யர் என்பவரும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தும் வடமொழியில் தான் அந்த இராகமாலிகைக்குப் பாட்டியற்றினர்.''
(பக். 34—35.)

''மற்றும் தமிழ்நாட்டுக்கு வந்து குடியேறிய பரம்பரையினர் சிலரும், தமிழிசைக் கலைஞர்களிடம் இசையைக் கற்றுத்தேறி முற்காலத்திலிருந்த தமிழ்ப் பாடல்களைப் புறக்கணித்துத் தங்கள் பரம்பரையினருக்கு வடமொழி, தெலுங்கு மொழிகளில் பாட்டுகள் இயற்றி அவற்றையே பாடி வரலாயினர்''.
(பக்.—35)

''அவ்வாறெல்லாம் தமிழ் நாட்டில் வாழ்ந்து வந்த பார்ப்பனர் தமிழைப் புறக்கணித்துப் பிறமொழிகளில் எழுதுவதையே பெருமையாகக் கருதினர். அவர்களைப் பின்பற்றி ஒன்றுமறியாத தமிழர்களும் தங்கள் சொந்த தமிழிசையைப் புறக்கணிக்கத் தொடங்கினர்.
(பக். 35.)

''எனினும் தமிழரின் இசைக்கலை அழிந்துவிடவில்லை. கருநாடக இசை என்னும் வேறு பெயரில் இன்றளவும் நம் நாட்டில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. பழந்தமிழ் பண்களில் உள்ள அலகு நிலைகள் இக்காலத்தும் மாறுபடவில்லை. இன்றைய தென்னிந்திய இசைக்கு அடிப்படையான தோற்றமும் இலக்கணமும் பழந்தமிழகத்தில் வழங்கி வந்த இசைத் தமிழ் முறையேயாகும்.''
(பக். 35)

''தமிழறிஞர் திரு. டி. கே. சி. 'நம் நாட்டு இசையானது ஏறத்தாழ 20,000 ஆண்டுகளாக வளர்ந்து வந்திருக்கிறது. உலகத்திலேயே முதன் முதல் நம் நாட்டில்தான் இசை என்று ஒரு கலை சிறந்து விளங்கிற்று. மேலநாட்டு இசைகளெல்லாம் இங்கிருந்து ஏற்றுமதியான இசையை, அதன் உருவை, முறையைக் கூட்டியும் குறைத்தும் நொறுக்கியும் சிதைத்தும் உருவாக்கப்பட்டவையே'' எனப் பெருமையுடன் கூறிய போந்தார்.''
(பக்: 36)

''தூங்கிக் கிடந்த தமிழர்களுக்கு விழிப்பூட்டிப் பல நூற்றாண்டுகளாகத் தாழ்ந்து கிடந்த தமிழிசையை மீண்டும் தலை நிமிரச் செய்ய சில அறிஞர்கள் அண்மைக் காலத்தில் தோன்றினர்.''

''தமிழகம் இப்பொழுது விழித்துக் கொண்டுவிட்டது. கருநாடக சங்கீதம் வேறு தமிழிசை வேறு என்ற போலி வாதத்திற்கு இனி இடமேயில்லை. கருநாடக இசை தமிழரின் மிகப் பழைய சொத்து''
—(பக்: 40)

இப்படி எண்ணற்ற வரலாற்று உண்மைகள் இச்சிறு நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன. தமிழர் ஒவ்வொருவரும் வாங்கிப் படித்துப் பரப்ப வேண்டிய கருத்துகள் அவை.

இந்நூலின் விலை 80 காசுகளே! ஓர் உருபா அனுப்பினால் நூலை அஞ்சலில் பெற்றுக்கொள்ளலாம். இது கிடைக்குமிடம்: 'விடுதலை', பெரியார் திடல், சென்னை-7.

பரிசுப் போட்டி !

இனத்தை மீட்பதற்கோர் இனிய முனைப்பும், அருந்தமிழ்ப் பாவலர்க்கோர் அரிய அழைப்பும் !

அன்புசான்றீர்,

''அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்'' —என்ற இனை
மீட்டுரைக்கு ஏற்பவும்,
''குறியுற்ற மறவர்களே!
இப்பணியை முடிப்பதற்கோர்
கூட்டம் வேண்டும்!
பேச்சாலும், எழுத்தாலும்
பாட்டாலும் கூத்தாலும்
பிறர் உவக்க
ஓச்சுகவே மணிமுரசு''

என்ற **பாவேந்தரின்** தமிழியக்கக் கனவைச் செயலாக்கவும்,

''எழுக தமிழ் மங்கையரே! நல்லிளைஞீர்! உங்கள்
இளமைதரும் கனவொருபால் இருக்கட்டும்; முன்னே
தொழுக தமிழ் அன்னையினைத் துலங்குக நும்ஆற்றல்!
துணிவுறவே ஊரூராய்த் தெருத்தெருவாய்ச் சென்றே,
உழுகநறுஞ் சொல்லாலே! ஊன்றுகசெந் தமிழை;
உணர்வுமழை பொழிவிக்க; எண்ணஎரு ஊழ்க்க!
செழுமையுறுந் தமிழ்க்குலத்தை விளைவிக்க!''

என்ற **பாவலரேறு**வின் அறிவுரைக் கேற்பவும் கீழ்காணும் போட்டிகளில் பங்குகொள்ள ஆர்வமும் திறமையும் கொண்ட பாவலர்களை அழைக்கிறோம்.

போட்டிகளுக்குரிய வகுமுறைகள்:

1. பாடல்கள் இனிய எளிய முறையிலும் சொற்களைச் சிதைக்காமலே பாடுவதற்கு உரிய முறையிலும் அமைய வேண்டும்.

2. தேர்ந்தெடுக்கப் பெறும் சந்தங்கள், இசைகள் பொதுமக்களை ஈர்ப்பவையாய் இருத்தல் வேண்டும்.

3. தேர்ந்தெடுக்கப்படும் படைப்புகளை நிகழ்த்துவதற்கும் அதை நாடாவில் ஒலி, ஒளிப்பதிவு செய்து தமிழ் கூறும் உலகெங்கும் பரப்புவதற்கும் ஏற்பிசைவை எழுத்து மூலம் வழங்க வேண்டும்.

4. போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு மேற்படி நிகழ்ச்சிகளோடு கூடிய விழா அமைத்துத் தக்காரால் பரிசு வழங்கப்படும். விழா நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

5. படைப்புகளின் நோக்கம், தமிழின எழுச்சிக்குத் தூண்டுபவையாய் இருக்க வேண்டும்.

6. ஒவ்வொரு படைப்பும் குறைந்தது 30 நிமையம் நடத்தப்படக்கூடியதாக சோர்வின்றி ஆர்வமூட்டுவதாக இருக்க வேண்டும்.

7. படைப்புகள் வந்து சேரவேண்டிய முகவரி

''தென்மொழி நா. இளமாறன்,
இளநிலைப் பொறியாளர்
காவேரி மின் நகர், குதிரைக்கல்மேடு,
பவானி-638302.

8. படைப்புகள் வந்து சேரக் கடைசி நாள் ஆடவை 32 தி.பி. 2014. 16-7-84.

போட்டிகள் :

1. வில்லுப்பாட்டு (குறைந்தது ஆறு சந்தங்கள் அல்லது இசைகளும் உரைகளும்.)
   முதல் பரிசு உருபா : 300/—
   இரண்டாம் பரிசு ,, : 200/—
2. தெருக் கூத்து (மணிக்குறவன் கதை போன்ற அமைப்பு)
   முதல் பரிசு உருபா 300/—
   இரண்டாம் பரிசு ,, 200/—

சிறந்த படைப்புகளுக்கு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். பிற விளக்கம் வேண்டுவோர் மேற்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்க.

இன்னணம்,
மு. கா. நாகமலையார் அறக்கட்டளை
சார்பாக, தென்மொழி நா. இளமாறன்

நாள்: மேழம் 14
27-4-83

தமிழ் நிலத்திற்கு வாழ்த்தும் தகு நன்கொடையும் !

பெருஞ்சித் திரனார் நிறைந்தவிந் நாட்டில்
வருஞ்சில் லாண்டில் வாய்மையை யூட்டி
அருஞ்சித் திரத்தின் அமையதன் னாட்சி
பெருஞ்சித் திரனார் பெருமனம் கொள்க!

தமிழ்நிலம் காணும் தமிழ்நிலத்திற்கு என் சிறு நன்கொடையாக உரு 500/- பெறுக.

இவண்
கோ. அருண்முல்லை
சிங்கப்பூர்-0207.

ஓர் இரங்கல் மடல் !

தண்ணீர்த் தட்டுப்பாடு குறித்து இலண்டன், தமிழர் முன்னேற்றக் கழகம்

தமிழக அரசுக்கு எழுதிய மடல் !

ஏப். 28: இலண்டனில் உள்ள தமிழர் முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர், தமிழகத்தில் உள்ள தண்ணீர்த் தட்டுப்பாடு குறித்து, தமிழக அரசின் உள்துறை அமைச்சருக்கு ஒரு மடலை விடுத்துள்ளது. அம்மடலின் படியொன்று 'தமிழ் நிலத்'திற்கும் அனுப்பப்பட்டுள்ளது. அம் மடல் விளக்கம் வருமாறு.

எங்கள் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தமிழக அரசின் அமைச்சரவைக்கும், உற்றுழி உறுதுணை புரிந்து நிற்கும் எதிர்க் கட்சித் தலைவர்கள் எல்லோருக்கும், குறிப்பாகத் தமிழகத்தில் வாழும் எம் உடன்பிறப்புகள் எல்லோருக்கும் எங்கள் ஆழ்ந்த இரக்கத்தையும் தாழ்பணிந்த வணக்கத்தையும் இதன் வழிக் கூறிக் கொள்வதோடு; குடிக்கக் கூடத் தண்ணீர் கிடைக்காத இக்கட்டான நிலையில் தமிழ் மண்ணில் மக்கள் தொல்லையுறுவதறிந்து உள்ளபடியே நெஞ்சப் குமுறுகின்றது.

இயற்கையின் திருவிளையாடல் என்பதா அல்லது இருக்கையில் இருந்தோரின் ஏமாளித்தனத்தால் ஏற்பட்டிருக்கும் அவல நிலையா என்பதை விரைவிலே ஆய்ந்திடுவோம்.

இருப்பினும் எம்மக்களின் குடிநீர்ப் பஞ்சத்தைக் களைந்திட அல்லது சிறிதேனும் குறைத்திட எத்தனைக் கோடி உருபாக்கள் முகாமைப் பட்டாலும், கடன்வாங்கியாவது தண்ணீர்ப் பஞ்சத்தைக் குறைத்திட வினையாற்ற, வேண்டுமாய்த் தாழ்பணிந்து வேண்டுகின்றோம். குடி தண்ணீர்ப் பஞ்சத்தை நீக்குவது கடல் கடந்தும் உலகமெல்லாம் பரவி வாழும் தமிழ் மக்களின் கடமையன்றோ ! உலகத் தமிழரின் துயர் துடைக்கும் பாதுகாப்பு மன்றமாகத் திகழும் இலண்டன் தமிழர் முன்னேற்றக் கழகம் தன்னாலான அனைத்து உதவியும் செய்திட அணியமாகியுள்ளது.

''தமிழக நீர்ப்பஞ்ச உதவித் தொகை !'' என்றத் திட்டத்தில் செயல்பட்டுப் பொருளைச் சேர்த்துச் சிறுக சிறுக அங்கு அரசின் பொறுப்பாளர் குழுவிற்கு அனுப்பிட ஆய்வு நடத்திக் கொண்டிருக்கின்றோம். உடன் உங்கள் பொறுப்பாளர் முகவரியை அனுப்பியுதவிட அன்புடன் வேண்டுகிறோம்,

வறட்சியில் மிரட்சி கொண்டு உயிர்ப்பலியாகிக் கொண்டிருக்கும் எதிர்கால மழலைகளுக்குத் தாக்கப்பட்டிருக்கும் அனைத்து உடன் பிறப்புகளுக்கும் மீண்டும் மீண்டும் எங்கள் ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் கூறிக் கொள்கிறோம். மிக்க நன்றி !

இவ்வண்ணம்.
பொதுச் செயலாளர்.
இலண்டன் தமிழர்
முன்னேற்றக் கழகம்
இலண்டன் E-12.

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவரை, குற்றம் மெய்ப்பிக்கப் படுவதற்குள், குற்றவாளியாகவே கருதி விடுகின்ற மனப்பான்மையைக் கைவிட்டுவிட வேண்டும். மேலும் இவர்கள் ஐயப்படுபவர்களையெல்லாம் பிடித்து உள்ளே வைக்க வேண்டுமானல் பிணையல், பொறுப்பு (Bail) என்பதெல்லாம் தேவையே இல்லை. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தேவையான, தகுந்த பொறுப்பின் —பிணையலின்— அடிப்படையில் தானே வெளியில் உள்ளார்கள். அதுவும் வழக்கு மன்ற முறை வகுப்புப்படி, ஒவ்வொரு நாளும் மாலையில் காவல்துறை அதிகாரிகளின் முன் தவருமல் கையெழுத்திடுகின்றவர்களைக் காவல் துறை ஐயுறுவதும், அதற்காக அரசு அவர்களைப் பிடித்து உள்ளே வைப்பதும் சரியானல், காவல்துறை தான் எதற்கு? சட்டநெறி முறைகள், விலக்கீடுகள் தாம் எதற்கு? ஐயுறுகின்றவர்கள் அனைவரையும் உள்ளே வைத்து விடலாமே! (ஆனல், இப்பொழுது அப்படித்தான் அரசு நடந்து வருகிறது என்பது வேறு செய்தி.)

இனி, பிரபாகரனும் இராகவனும் தப்பியோடி விட்டார்கள் என்பதற்காக, முகுந்தன் குழுவினரும் தப்பியோடி விடுவார்கள் என்பது தேவையற்ற பொருளற்ற கருத்தாகும், அடிப்படையிலேயே இவர்கள் வேறு வேறு குழுவினர். அந்தக் கொள்கை வேறுபாட்டினுலேயே, இவர்களுக்குள் பூசல் ஏற்பட்டுப் பிடிபட்டுள்ளனர் வேறு வேறு, கொள்கைப் போக்குள்ளவர்கள், தப்பியோடுவதில் மட்டும் ஒத்து இயங்குவார்கள் என்று கணிப்பது, விடுதலைப் போராட்ட வீரர்களின் உயர்ந்த கொள்கை உணர்வையே அவமதிப்பதாகும். அவர்களைத் திருட்டு, கொலை, கொள்ளை முதலிய குமுகாயக் குற்றவாளிகளின் மனப்பான்மையுடன் அணுகுவது, விடுதலை வரலாற்றை இழிவுபடுத்துவதாகும். காவல் துறையினர்க்குக் குற்றவாளிகளை மதிப்பிடுவது போல் குற்றங்களையும் வேறுபடுத்தி உணரத் தெரிந்திருக்க வேண்டும்.

இனி, முகுந்தன் குழுவினரும் பிரபாகரன் குழுவினரைப் போல் தப்பிவிட எண்ணியிருந்தால், இப்படி இரண்டு பிரிவாகவா தப்பியோடத் திட்டமிட்டிருப்பர். ஒரே நாளிலேயே அனைவருமே தப்பியிருப்பார்களே! இந்த எளிய மனவியல் உண்மை கூடவா விடுதலைப் போராட்ட வீரர்களுக்குத் தெரிந்திருக்காது? ஒரு குழு தப்பினுல், இன்னொரு குழுவையும் பிடிக்கும் அளவுக்குத் தானே நம் காவல்துறை தவருகச்செயல்படும் என்பது அவர்களுக்கு விளங்கியிருக்காதா?

அடுத்து, இவர்கள் தாம் எல்லைக்கடவு எடுத்துக் கொண்டு இந்த நாட்டுக்கு வரவில்லையே. பின் போவதற்கு மட்டும் எதற்கு எல்லைக்கடவு இவர்களுக்கு? கள்ளப்படகே போதாதா? இனி, எல்லைக்கடவு முயற்சி நடந்ததென்ருல் கள்ளப் படகை எதற்கு இவர்கள் அமர்த்த வேண்டும்? இரண்டில் ஒன்று தானே உண்மையாக இருக்க முடியும்! இரண்டு முயற்சிகளையும் இவ்வளவு வெளிப்படையாகச செய்ய இவர்கள் என்ன ஒன்றுமறியாதவர்களா? விடுதலைப் போராட்ட முயற்சியுடையவர்களுக்கு, ஒருதிருடனுக்கிருக்குப தந்திர அறிவு கூடவா இருககாது. காவல்துறையினர் நன்ருகச் சிந்தித்துப்பார்க்க வேண்டும்

மேலும், இக்குற்றச் சாட்டுகள் தொடர்பாக வழக்கு மன்ற நடவடிக்கையில் ஈடுபட விருப்பதால் இன்னும் இதுபற்றி விரிவாக ஆராயவோ கருத்துக் கூறவோ நாம் விரும்பவில்லை, ஆனல்,

மொத்தத்தில், முகுந்தன் முதலியோரை மீண்டும் சிறைப்படுத்தியிருப்பது தேவையற்ற ஒரு நடவடிக்கையாகும். இன்னுஞ்சொன்னல் மக்கள் உரிமைக்காகப் போராடும் ஒரு விடுதலை இயக்கத்தின் நடவடிக்கைகள் அனைத்துமே சட்ட அடிப்படையில் குற்றங்களாகத்தாம் இருக்கும். **ஆனல், அந்தக் குற்றங்களை அலசி ஆராயும்வேலையோ அதற்குத் தக்க நடவடிக்கை எடுத்துத் தண்டிக்க வேண்டிய கடமையோ, இங்குள்ள காவலர்களுடைய, அரசுடைய பணிகள் அல்ல. அவை,** தொடர்புடைய நாட்டுக்கும், அரசுக்கும் சொந்தமான பணிகளாகும். வீணுக நம் அரசினரும், காவல்துறையும் இந்த வகையில் இவர்களை ஆராய்ந்து கொண்டிருக்கும் தேவையற்ற நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என்று கேட்டுக் கொள்வதுடன், போதுமான பிணையலும் பொறுப்பும் உள்ள பொழுது இவர்கள், வழக்குமன்றக் கட்டுப்பாடுகளுடன் வெளியே இருக்குமாறு விடுதலை செய்வதே நேர்மையும், நமக்குள்ள அணுகுமுறையும் உண்மையான போராட்ட உரிமை உணர்வை மதிப்பதும் ஆகும் என்று கூறிக் கொள்ளவும் விரும்புகிருேம்! எனவே முகுந்தன், சோதீசுவரன், நிரஞ்சன் ஆகிய மூவரையும் அரசு உடனே விடுதலை செய்து, தன் நல்லெண்ணத்தை உறுதிப்படுத்துப் என்று நாம் எதிர்பார்க்கிருேம்; நம்புகிருேம்!

-பெருஞ்சித்திரனர்

தமிழ்நிலம் ஆள்வோம் தழைத்து!

1. விழியற்ற எந்தமிழர் மேவும்கைக் கோலாய்
வழிகாட்டி யாயமைந்து வந்து—மொழித் தூய்மை
பேணும் 'தமிழ்நிலம்', பீடுபெற் றுய்யநாம்
காணும் படைக்கருவி காண்.

2. எப்படி வாழ்ந்தஇனம் இன்றைக்கு ஞாலமிசை
இப்படித் தாழ்ந்தே இழிந்தது—தப்படி
வைத்தென்று தான்வருந்தி வந்த 'தமிழ்நிலம்'
முத்தமி ழர்க்கு முரசு.

3. மூங்கைய ராய்வாழும் மொய்ம்பிழந்த எந்தமிழர்
ஓங்கிச் சிறக்க உலகரங்கில்—தீங்ககற்றி
மண்ணுரிமை பேணி மகிழத் 'தமிழ்நிலம்', நம்
கண்ணென வாய்த்தது காண்.

4. வாய்மை தனைக்காத்து வண்டமிழர்க்குக்காப்பாய்த்
தாய்மையாம் அன்பு தழைத்தோங்கி—வேய்ந்துபுகழ்
வீறு தனைக்காட்டி வெல்லும் 'தமிழ்நிலம்'
மாறுபா டின்றி மணந்து.

5. காழ்ப்புக் கரவொழித்துக் காணநாம் முன்னேற்றம்
வாழ்ந்து சிறக்க வழிவகுத்துத்—தாழ்வகற்றித்
தக்கபடி ஈண்டுத் 'தமிழ்நிலம்', போற்றுமாம்
ஒக்க இனநலம் ஓர்ந்து.

6. கொத்தடிமை வாழ்வொழித்துக் கூன்நிமிர்த்தி நம்மையினி
எத்தாமல் மாற்ருர் இனங்காத்து—முத்தமிழைப்
போற்றித் 'தமிழநிலம்', பொங்கி யெழுந்தார்த்துத்
தோற்றிடும் காண்புத் துலகு.

7. ஏற்றம்பெறலென்ருே என்றிருந்த நம்மவரைப்
போற்றித் 'தமிழ்நிலமே' போந்துகாப—பாற்றிடும்
கொள்கை விடுதலையாய்க் கோடென வேநிமிர்ந்த
கள்ளப் பகையொழித்துக் காண்.

8. கொண்டுய்வோம் நாமுமே கோதற்ற 'தமிழ்நிலத்தை'
மண்டு புகழுடன் மண்ணுண்டு—திண்மையுடன்
மானத்தைப் போற்றி மதிசிறந்து வாழ்ந்திருப்போம்
ஊனமின்றிப் பொங்க உணர்வு.

9. போற்றின் 'தமிழ்நிலத்தைப்', பொங்கு கடலனைய
ஆற்றல் மிகப்பெருக்கும் அன்பெனும்—ஊற்றெனவே
ஒப்பில் திறன்வளர்து(த்) ஊக்கி நமையுயர்த்தும்
கப்புமிருள் நீக்கும் கதிர்.

10. தக்கார் தகவுடையார் தம்முள் மிகச்சிறந்து
மக்கட் பணிபுரியும் மாண்பறிஞர்.—மிக்கபுகழ்
மேவுபெருஞ் சித்திரனர் மேன்மைத் 'தமிழ்நிலத்துக்'
கூவு குயிலென்று கூறு.

இரட்டைப் பாவலர்கள்
குமர நடவரச ஈவப்பனர்
தமிழ்க்குமரன்

"அண்ணு!"

"என்ன தம்பி?"

"திருக்குறளுக்கு எழுதப்பட்ட பழைய உரைகள் எத்தனை அண்ணு?"

"பத்து",

"அவற்றை எழுதியவர்கள் யார் யார் அண்ணு?"

"தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பருதி, திருமலையார், மல்லர், கவிப்பெருமாள், காளிங்கர், பரிமேலழகர்."

'இந்தப் பத்துப் பேர்களில் யார் அண்ணு பிந்தியவர்?"

"பரிமேலழகர் தான். இன்று முழுமையாகக் கிடைத்திருக்கும் உரையும் அவருடையது தான்."

"ஏனைய ஒன்பது பேர் எழுதிய உரைகளும் அழிந்து போய்விட்டனவா ?"

"ஆமாம், மணக்குடவர், காளிங்கர், பருதி ஆகிய மூவரின் உரைகளில் சிற்சில பகுதிகளாவது கிடைக்கின்றன, மற்றையோர் உரைகளில் ஒரு பகுதியும் கிடைக்கவில்லை !"

"அப்படியென்ருல், பரிமேலழகரும் அவரைச் சார்ந்தவர்களும் அந்த உரைகளையெல்லாம் அழித்துவிட்டிருப்பார்களோ ?

"அது எப்படிச் சொல்ல முடியும்?"

"அறமாவது, மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலுமாம்"— என்பது போல் உரை எழுதிய பரிமேலழகர் போன்ருேர் ஏனைய உரைகளை அழிக்க முயலாமலா இருந்திருப்பர்?"

"எனக்குத் தெரியாது தம்பி!" — **தமிழவேள்.**

உ. த. மு. க.வின் உயர்ந்த கொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்.
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல், அணுகுமுறை.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவுஎண். TN/MS(C)/657

அனுப்புதல்:
'தமிழ் நிலம்'
5, அருணுசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை—5.

உறுப்பினர்.
ஆண்டுக் கட்டணம் ரூ. 36/-
அரையாண்டுக் கட்டணம் ரூ. 18/-

பெறுநர். நூல் அஞ்சல்
திரு / திருவாட்டி.

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனர், அச்சிடுவோர்: 'தென்மொழி' அச்சகம், 5, அருணுசலத் தெரு, சென்னை-5.